தமிழ்ப் பண்பாடு

Approved By The Text-Book Committee, Madras.
For Higher forms-Class use Non-detailed study,
Vide F. S. G. G. of 1953-54, in Part I-B.

வித்துவான் க. பெரியசாமி
தமிழாசிரியர்
நகராண்மை உயர்நிலைப் பள்ளி,
சேலம்.

★

நிர்மலா பப்ளிஷிங் ஹவுஸ்,
பாடநூற் பதிப்பகத்தார்,
சேலம்.

பதிப்புரிமை
முதற்பதிப்பு 1953
இரண்டாம் பதிப்பு 1954

உரிமையுரை

என் உளம் உயர்வதற்கேற்ற உண்மைப் பொருளை அவ்வப்போது எடுத்துக் கூறி, என்னை நல்வழியில் செலுத்திவரும் எனதருமை ஆசிரியர் **உயர் திரு டாக்டர் மு. வரதராசனுர்** அவர்களுக்கு இந்நூலை உரிமையாக்குகிறேன்.

சென்னை, பச்சையப்பன் கல்லூரித் தலைமைத்
தமிழ்ப் பேராசிரியர்

உயர்திரு. டாக்டர் மு. வரதராசனார், M.A., M.O.L., Ph.D

அவர்கள் அளித்த

முன்னுரை

மாணவர் உள்ளத்தில் முன்னோரின் வரலாற்றுப் பெருமைகள் பதிதல், அவர்களின் அறிவு வளர்ச்சிக்கு நன்மை செய்வதாகும். தமிழ்மாணவர் அறிய வேண்டும். சிறப்புடைய தமிழ்நாட்டு வரலாற்றுக் குறிப்புக்கள் பல பழந்தமிழ் இலக்கியத்தில் பொதிந்துள்ளன. பழங்காலத்தில் உலகத்திற்குத் தலைமை தாங்கிய ஆட்சிப் பெருமையும் நாகரிக உயர்வும் தமிழகத்திற்கு இருந்தன. இலக்கியம் கற்பிப்பவர் இதனை மறவாமல் மாணவர் உள்ளத்தை வளர்த்தல் கடமையாகும்.

வீரம், கொடை, அருள், நட்பு என்னும் தலைப்புக்களில் சில நல்ல கருத்துக்களை இலக்கியத்திலிருந்து திரட்டிக் கதைப்போக்கில் தந்துள்ளார் இந்நூலின் ஆசிரியர் **வித்வான் திரு. க. பெரியசாமி.** ஆசிரியராக இருந்து மாணவர் உலகைப் போற்றும் அவர் இத் துறையில் தொண்டு ஆற்ற முன்வந்தது பாராட்டத்தக்கதாகும்.

'தமிழ்ப் பண்பாடு' மாணவர்க்குப் பயன் தருவதாக.

மு. வரதராசன்.

ஆக்கியோன் முன்னுரை

அமிழ்தினு மினிய தமிழ் மொழியில் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன் எழுதிய நூல்கள் பல உள்ளன. அவற்றுள் புறநானூறும் ஒன்றாகும். புறநானூறு பண்டைக் காலத் தமிழ் மக்களின் பண்பாட்டினை எடுத்துக் கூறும் நூல்களில் சிறந்து விளங்குகின்றது. பண்டைத் தமிழர்களின் பண்பாடு படிக்கும் மாணவர்கள் உள்ளத்தில் பதியுமாயின் அவர்கள் வளர்ச்சிக்கு மிக்க நன்மை பயக்கும். அந்த வளர்ச்சியை உண்டாக்க வேண்டுமென்பது என் அவா. ஆதலினால் இந்நூல் எழுதத் தொடங்கினேன். இந்நூல் அனைவர்க்கும் பயனளிக்கவேண்டுமென்பதே எனது நோக்கம். அந்த நோக்கத்தால் இந்நூலை ஏற்றுப் போற்றுமாறு அனைவரையும் வேண்டிக்கொள்கின்றேன்.

இச் சிறு நூலையும் ஒரு பொருட்டாகக் கருதி அரியதொரு முன்னுரையை மனமுவந்து வழங்கிய உயர்திரு. **மு. வரதராசனார்** அவர்களுக்கும், இந்நூலை மேற்பார்வையிட்டு சில திருத்தங்கள் செய்து உதவிய சேலம் நகராண்மைக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் உயர்திரு. **புலவர் நடேச உடையார்** அவர்களுக்கும், இந்நூலை நல்ல முறையில் வெளியிட்டுள்ள **நிர்மலா பதிப்பகத்தார்க்கும்** என் நன்றி உரித்தாகுக.

க. பெரியசாமி

பொருளடக்கம்

பொருள்	பக்கம்
1. வீரம்	1
2. கொடை	31
3. அருள்	58
4. கட்பு	74

1. வீரம்

THE MADURA TAMIL SANGAM

தமிழரின் தொல் வீரம்

"வீரம் செறிந்த தமிழ்நாடு" என்று புகழ்ந்தார் நம் அமரகவி பாரதியார். இது வெறும் புகழ்ச்சி அன்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுந்த இலக்கியங்களைக் காணுகின்ற காலத்து இதன் உண்மை நன்கு தெரியும். "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு, முன்தோன்றி மூத்தகுடி" என்ற அடிகள் தமிழர்களின் குடிப் பழமையையும், வீரத்தொன்மையையும் காட்டுகின்றன.

இடைச்சங்க கால நூலாகிய தொல்காப்பியத்திற்கு முன் செங்கோன் என்பவனது படையெடுப்பைப்பற்றிக் கூறும் "செங்கோன் தரைச்செலவு" என்னும் நூல் ஒன்று இருந்ததாகத் தமிழர்கள் கருதுகின்றனர். தொல்காப்பியக் காலம் மூவாயிரம் ஆண்டுகட்கு முன் என்று வரலாற்று ஆராய்ச்சியாளர் ஆராய்ந்து கூறுகின்றனர் அதற்கு முன் இப்படையெடுப்பு நடந்தது என்று அறிகின்றபோது தமிழர்கள்பால் வீரம் தொன்று தொட்டு நிலைத்திருந்தது என்று தோன்றுகின்றது அன்றோ ?

தமிழர்கள் தொன்மைநூல் என்று போற்றப்படுகின்ற தொல்காப்பியம் வீரப்பொலிவினை விளக்கும் போர் நிகழ்ச்சியினை வெட்சிமுதல் பாடாண் ஈறாக எழுதிணை எனவகுத்து, அவ்வெழுதிணைக்கும் ஏழு அடையாளப் பூவினையும் கூறியுள்ளது. வெட்சி, கரந்தை, வஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை ஆகிய இப்பூக்களை அணிந்து தமிழ் வீரர்கள் போர் புரிந்தார்கள் என்று தெரிகின்றது. தொல்காப்பியமொன்றே பண்டைத் தமிழரின் வீரத்தொன்மையை விளக்கப்போதிய சான்றாகும்.

மறப்பண்பு

முதியமறக்குடியில் தோன்றிய தமிழ் மக்கள் மறப்பண்பு உடையவர்களாக விளங்கினர். மக்கள் நோய்வாய்ப்பட்டிறப்பினும், மகவு செத்துப்பிறப்பினும், அல்லது ஊன் பிண்டமாகப் பிறப்பினும் அவர்களை வாளால் பிளந்து அடக்கஞ்செய்வதே தமது பண்பாகக் கொண்டிருந்தனர். காரணம் மூப்பினும் பிணியினும் இறவாது அமர்க்களத்து வீழ்ந்து இறந்தோரே துறக்கம் பெறுவர் என்பது அவர்கள் கருத்தாகும். இச் செய்தியை நாம் ஔவையார் பாடலிலிருந்து அறியலாம். ஔவையார் அதியமானைப்பார்த்துக் கூறும்போது:—

“பெருமைபெற்ற வேந்தே! உன்னை எதிர்த்து வந்த வேந்தர்கள் உனது வாளினல் விழுப்புண் பட்

டமையால் அவர்கள் நோய்வாய்ப்பட்டிறக்கும் இழிவி னின்றும் பிழைத்தார்கள். நோய்வாய்ப்பட்டிறந் தோர் இயல்பாக வீரசுவர்க்கம் எய்தார். ஆதலால், அவர்களை அறத்தினின்றுமாறு அந்தணர்கள் பசிய தருப்பைப்புல்லில் கிடத்தி "தனது ஆண்மையே பற்றுக்கோடாகக் கொண்டு பெரும்போர் புரிந்து, அப்போர்க்களத்திலேயே வீழ்ந்து இறந்துபட்ட வீரக் கழலினையுடைய வீரர்கள் செல்லும் உலகத்தில் நீவிரும் செல்க" வெனக்கூறி வாளால் வடுச்செய்து அடக்கம் செய்வர். அந்நிலை உன்னை எதிர்த்து இறந்த பகைவர்க்கு இல்லாதொழிந்தது:—

"..............................பீடின் மன்னர்
நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇக்
காதல் மறந்தவர் தீதுமருங் கறுமார்
அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி பசுப்புற் பரப்பினர் கிடப்பி
மறங்கந் தாக நல்லமர் வீழ்ந்த
நீள்கழல் மறவர் செல்வுழிச் செல்கென
வாள்போழ்ந் தடக்கலு முய்ந்தனர் மாதோ"

(புறம். 93)

சேரமான் கணைக்காலிரும்பொறை என்பவன் சோழன் செங்கணானோடு பொருது தோற்றான். பின்னர் சோழ அரசனால் தளைப்பட்டுச் சிறையில் கிடந்த சேரன், நீர் வேட்கையைத் தணிக்கத் தண்ணீர் கொண்டுவா என்று காவலாளர்க்குப்

பணித்தான். காவலாளர் மதியாது காலம் தாழ்த்தித் தண்ணீர் தந்தனர். கொடுக்கப்பட்ட நீரைச் சேரன் குடிக்க மறுத்து உயிர்விட்டபொழுது அவ்வரசர் பெருமான் பாடிய பாடலில்,

" குழவி யிறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார். (புறம். 74)

என்று பாடியுள்ளான்.

இதனால் அரசகுலத்தில் பிறக்கும் பிள்ளை, சாக் குழவியாகவேனும், ஊன் பிண்டமாகவேனும் பிறந்தாலும் இது ஆளன்று என்று நீக்காது, அதையும் வாளோச்சி வடுச்செய்து அடக்கம் செய்வர் என்பதை அறியலாம்.

அன்றியும் போரில் புண்பட்டு இறவாது வீழ்ந்து கிடப்போர் தம் புண்ணைக் கிழித்துப் பெரிதாக்கிக் கொண்டு இறப்பார்கள். இச்செயலை "மறக்காஞ்சி" என்று புகழ்வர் தமிழர்கள். வீரப்போர் புரிந்து வெற்றிகண்டு தன் மனையகம் வந்தடைந்த மணாளனது துன்பம் நீங்க, அவன் மனைவி தனது மார்பினால் வேதுகொண்டு ஒற்றி அவன் வீரப்புண்ணை ஆற்றுவாள். அவன் இறக்கநேரின் அவனோடு தீப் பாய்ந்து தானும் இறப்பாள். அவ்வாறு இறந்த வீரனுக்கும், வீரப்பெண்மணிக்கும், வீரக்கல் நாட்டி வீரவிழா செய்வது பழங்காலத் தமிழரின் மறப்பண்பாகும்.

வீரத்தின் விளைவு போர்

வீர மரபு வாய்ந்த வீரர்களுக்கிடையே போர் நிகழ்வது இயல்பே. வீரம் உளதென்று வீண்போர் செய்யார் பழங்கால வேந்தர்கள். ஏதாவது ஒன்றின் விளைவுகருதியே பழம்பெரும் வேந்தர்கள் போர் செய்து வந்தார்களென்பதைப் பின் வரும் காரணங்களால் அறியலாம்.

ஒரு நாட்டு மன்னன் படைபலம் பெற்று அரசாளுங் காலத்தில் படைபெருக்கினால் மற்ற நாட்டையும் வென்று நமதாக்கி, ஒரு குடை நிழலில் உலகம் முழுமையும் அரசாளலாமே யென்ற அவாவினால் அவன் மற்ற நாட்டின்மேல் போர் தொடுக்கலாம். நம் தமிழ்நாட்டை ஆண்ட அரச குடியில் தோன்றிய சில அரசர்கள் அவ்வாறு ஆண்டிருக்கிறார்கள். இதற்குச் சான்று இமயவரம்பன், செங்குட்டுவன், நெடுஞ்செழியன் கரிகாலன் என்போராவர்.

இமயவரம்பனென்ற பெயர் இயற்பெயரன்று. இயற்பெயர் நெடுஞ்சேரலாதன் என்பதாகும். இவன் இமயம்வரை படையெடுத்து, அதற்குஅப்பால் செல்லாத நிலையில் இமயமலைத் தடுத்துள்ளதால், அம்மலையில் தன் வில்லினைப் பொறித்து வெற்றி கொண்டு வீரமுழக்கத்தோடு தமிழ்நாடு திரும்பினான். “இமய முதல் குமரி வரை ஒரு மொழி வைத்து

உலகாண்ட இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்" என்ற பெயர் பூண்டு பெருமையுற ஆண்டானென்று வரலாற்றால் அறிகிறோம். இவ்வாறே மற்ற அரசர்களும் தாம்தாம் பெருநிலமன்னர்கள் என்று பெயர் பூண வேண்டுமென்ற பெரு அவாவால், அடிக்கடி போர் நிகழ்த்தி அரசாண்டனர் என்பதை அறிகிறோம்.

தன்னாடு சிறுநாடாக இருக்கலாம் தன் நாட்டு மக்கள் அளவில் பெருகியவராக வாழலாம். தன் நாட்டு மக்கள் வளமலிந்து, துன்பம் காணாது இனிய நற்குடியினராக வாழவேண்டுமென்று விரும்பிய அரசன், தன் நாட்டைப் பெருக்குவதற்காகப் போர்தொடுப்பதும் உண்டு. இதனைப் பின்வரும் பாடல் பகுதி வலியுறுத்தும்.

"வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொல் பொறாஅ(து)
இடம்சிறி தென்னும் ஊக்கம் துரப்ப
ஒடுங்கா உள்ளத் தோம்பா ஈகைக்
கடந்தடு தானைச் சேர லாதன்" (புறம். 8)

பிற நாட்டு மன்னன் மக்களுக்கு நன்மை புரியாது, மக்களைக் கொடுமைக்குள்ளாக்கும் கொடுங்கோலனாயின், அவனை அடக்கி அறம் நிலைநிறுத்த அவன்மேல் படையெடுத்துச் செல்லலாம்.

அயல்நாட்டு வேந்தன் மகளைத் தான் மணம் புரிய விரும்பியபோது அவன் மறுத்திருக்கலாம். மகள் கொடுக்க மறுத்த மன்னன்மேல் மற்ற நாட்டு வேந்தன் மாறுபட்டு மறப்போர் தொடுத்திருக்கலாம் இவ்வகையில் நடந்த போர்கள் பல வாதலை முன்னிட்டு இதற்கென "மகட்பாற்காஞ்சி" என்ற ஒரு துறையும் பழந்தமிழர் வகுத்தனர். பின் வரும் பரணர் பாட்டு இத்துறையை நன்கு விளக்குகின்றது.

"வேந்துகுறை யுறவுங் கொடாஅன் ....
....
விளங்கிழைப் பொலிந்த வேளா மெல்லியல்
....அவளொடு நாளை
மணம்புகு வைகல் ஆகுதல் ஒன்றோ
ஆரமர் உழக்கிய மறங்கிளர் முன்பின்
நீளிலை யெஃகம் மறுத்த உடம்பொடு
வாரா உலகம் புகுதல் ஒன்றெனப்
படைதொட் டனனே குருசில் .... (புறம். 341)

இம் மகட் கோடல் காரணமாக மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்கள் தன்னை நாடி வந்த பரிசிலர்க்கு முந்நூறு ஊரும் தந்து, தன்னையும் கொடுக்கக் காத்திருந்த பெருங்குண வள்ளலான பாரியினது பறம்புமலையை முற்றுகையிட்டனர். அதனோடு நில்லாது அவன் நாட்டை அழித்தனர். அவனையும் கொன்றனர். அவன்

மகளிரை மற்ற நாட்டு வேந்தர்கள் மணம் செய்யாத வாறு அலையவிட்டனர். இவ்வகைப் போரின் கொடுமை பெரிது.

வீரவிளக்கிற்கு நெய்

வீர விளக்கிற்கு நெய்போன்று அக்காலத்தில் அறிவுடை புலவர்கள் அமைந்திருந்தார்கள். அவர் கள் அரசர்களின் வீரப்பெருக்கையும் போருணர்ச் சியையும் அவ்வப்போது அரசர்களுக்கு அதிகமாக ஊட்டி வந்தனர். அரசர்களும் புலவர் வாக்கு "பொன்மொழி" என்று போற்றி வந்தார்கள். அதன் காரணமாக அரசர்கள் போர்நிகழ்த்தி வாழ் தலே பெருமையுடைத்தென்று கருதிப் போரை வளர்த்து வந்தார்கள். அப்போருக்குப் புலவர்கள் பாடிய பாட்டுக்கள் நெய்வார்ப்பது போல் அமைந் தன.

புலவர் அரசரை நோக்கி, "நீர் உம் பகைவர் நாட்டைச் சுடுகின்ற தீப்புகையினால் உமது தலை யிலே சூடியுள்ள தண்ணறும்பூ வாடுவதாக" என்று வாழ்த்தினரென்பதை,

"வாடுக பெருமநின் கண்ணி, ஒன்னார்
நாடுசுடு கமழ்புகை எறித்த லானே"

என்னும் பகுதி புலப்படுத்தும்.

"புலவர்கள் அனைவரும் உன்னை நோக்கினார்கள்; நீயோ உன் பகைவராகிய இரு பெரும் வேந்தர்களின் மண்ணை நோக்கினாய்" என்று வாழ்த்துவதும் உண்டு,

"புலவர் எல்லாம் நின்னோக் கினரே, நீயே
...
கூற்றுவெகுண் டன்ன முன்பொடு
மாற்றிரு வேந்தர் மண்ணோக் கினையே"

(புறம். 42)

மற்றும் உன்னைப் பகைத்தவர் நாடு தாயிழந்து உணவின்றி அழுகின்ற குழந்தையைப்போல ஓயாது அலறுவதாகும்—

"தாயில் தூவாக் குழவி போல
ஓவாது கூஉம்நின் உடற்றியோர் நாடே"—

என்று கூறுவர்.

அரசே! உன்னைப் பகைத்தற்கு முன்னால் பகைவர் தேயம் பல்வளம் பெற்று பசுமை நிலை உற்றிருந்தது. இன்றோ அவர்களது நாடு காடாயிற்று. நீ வேண்டிய வேண்டியாங்கு விரும்பி கொடுத்த வேற்றரசர்கள் நடுக்கந் தீர்ந்தனர். அவ்வாறு இல்லையாயின் புற்றீசல் போல ஒரு பகல் உணவிற்கும் வழியின்றி அவர்கள் கெடுவார்கள் என்பதை,

2

''தண்டமிழ் பொதுவெனப் பொரு அன்
போரெதிர்ந்து
கொண்டி வேண்டுவ னாயின் கொள்கெனக்
கொடுத்த மன்னர் நடுக்கற் றனரே
அளியரோ வளியரவ னளியிழந் தோரே
நுண்பல சிதலை யரிதுமுயன் றெடுத்த
செம்புற் றீயல் போல
ஒருபகல் வாழ்க்கைக் குலமரு வோரே''
(புறம். 51)

என்று கூறுவதன் மூலமாகவும் அறியலாம்.

இவ்வாறு புலவர்கள் கூறிய வீரமொழிகள் வெற்றி வேந்தர்களது உள்ளத்தில் நெய்வார்ப்பது போல் அவர்களது ஆற்றலை வளர்த்து வந்தன. புலவர்கள் இவ்வாறு கூறுவதன் காரணமாக அவர்களுக்கு அரசர்கள் ''உண்டால் நெடுநாள் வாழக்கூடிய நெல்லிக் கனியைக் கொடுத்தனர். கண்ணுக்குத் தெரிந்த நாட்டையும், பதினாறு இலட்சம் பொன்னையும் நல்கினார்கள். அதுவன்றி பலருக்கு யானையும், குதிரையும், பாற் சோறும், பட்டாடையும், பொன்னும், மணியும், தேரும் அளித்து அரண்மனை, வாழ்வையும் அளித்தனர்.''

வீரத்தால் வஞ்சினம்

வஞ்சினமாவது, பின்னர் நடக்கும் நிகழ்ச்சியினை உறுதிப்பாட்டுடன் உள்ளத்தினின்றும் வெளிப்படுத்தும் வீரச்சொற்களே ஆகும். அவ்வஞ்சினம், சினம் காரணமாக உள்ளத்தினின்று எழும். அச் சினம் எழுவது

தன்னலத்திஞலன்று; நாட்டின் பொதுவாழ்வின் நலம் கருதி அச்சினம் அரசர்கள் உள்ளத்தில் எழும். தமது ஆட்சிக்கு எவரேனும் இடையூறு செய்ய முயன்ருலும், அல்லது முயல்வதாகக் கேள்வியுற்ருலும் அரசர்களில் சிலர் கொதித்தெழுந்து வஞ்சினம் மொழிவர். அவ்வஞ் சினமாவது, "இன்னதுசெய்யேஞயின், இன்னதன்மை யனுவேன்" என்று துணிந்து கூறுதலாகும். இவ்வாறு கூறும் கூற்று அக்கால வேந்தர்களுக்கு மட்டுமல்ல. மற்றுமுள்ள ஆடவர், மடவார் ஆகிய அனைவர்க்கும் உரிய ஒரு பொதுப் பண்பாகும். அக்கால அரசர் களுள் வஞ்சினமொழிதலில் சிறந்து விளங்கியோர் மூவர். அவர்கள் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன், சோழன் நலங்கிள்ளி என்போராவர்.

"பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்" பகைவர் தன்னை எதிர்த்து வந்துள் ளனர் என்பதைக் கேட்டவுடனே கொதித்தெழுந்து "நீண்ட நல் யானையும் தேரும் மாவும் படையமை மற வரும் பெற்ருேமென்று என்மேல் சினங்கொண்டு, சிறு சொல் கூறிவந்த சினங்கெழு வேந்தர்களை, செருக் களத்தில் முறியடித்து அவர்கள் முரசினைக் கைப்பற்றி வாரேஞயின், என்குடையின் கீழ் வாழுகின்ற குடிமக் கள் கொடுங்கோலனென்று கூறட்டும், ஓங்கிய சிறப் பின் உயர்ந்த கேள்வி மாங்குடி மருதன் தலைவனுக உள்ள பாவலர்கள் என்னைப் பாடாது நீங்கட்டும். என்னை நாடிவந்து இரப்போர்க்கு இல்லையென்று சொல் லும் இழிவு என்னை வந்தடைவதாக" என்று வஞ்சினங் கூறிஞன்.

''நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரும் உடையம் யாமென்
றுறு துப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ(டு)
ஒருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலேன் ஆகுக
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க்(கு) ஈயா இன்மையான் உறவே''
(புறம். 72)

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் வஞ்சினங் கூறுழி ''என்னோடு பொருகின்றேனென்று என்னை எதிர்த்து வந்தோரைப் போர்க்களம் புலம்பப் புல்லி அவர்ப் புறங்காணேனாயின் என் பேரமர் உண்கண் பெட்புடை மனைவியைப் பிரிவேன் ஆகுக''

''அவர்ப்புறங் காணே னாயிற் சிறந்த
பேரமர் உண்கண் இவளினும் பிரிக'' (புறம் 71)

என்று கூறுகின்றான்.

அக் காலத்தில் ஆடவர்களே அன்றி மடவார் களும் வஞ்சினம் கூறிவந்தார்களென்பதைக் கண்ணகியின் வாயிலாக அறியலாம்.

கணவனை இழந்த கண்ணகி, பாண்டியன் இறந்த பிறகும் தன் கடுந்துயர் பொறுது பின்வருமாறு வஞ்சினம் கூறினாள். "கற்புடைப் பெண்டிர் பிறந்த நாட்டில் நான் பிறந்தவளாயின், யானும் ஓர் கற்புடையளாயின் காவலனால் கொலைப்பட்ட என் கணவனிடத்துச் சென்று கூடுவேன். மதுரையும் பற்றி எரிவதாகுக" என்று கூறினாள்.

"மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங்கி யானுமோர் பத்தினியே ஆமாயின்
ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையையும்
என் பட்டிமையும் காண்குறுவாய்"

(சி. வ. 35-38)

இத்தகைய கற்புடைய காரிகைகள் வாழ்ந்த நாடு தான் நம் தமிழ்நாடு. தமிழ்நாட்டை ஆண்ட அரசர்களும் ஆடவர்க்குரிய கற்புநெறி வழுவாது ஒழுகும் ஆண்மையே பேராண்மையென்று கொண்டனர். கற்பு நெறி கடந்து தன்னால் காதலிக்கப்பட்ட மனைவியொடு வாழாது, பொதுமக்கள் இல்லில் உறையும் வாழ்வை இழிந்த வாழ்வென்று அக்கால மன்னர்கள் கொண்டனர்.

சோழன் நலங்கிள்ளி என்பவன் போர்க்களம் புகுமுன்பு "என்னோடு பகைத்தவர் புலியுடன் பகைத்தோராவர். அவர்களை நான் விடுவேனாயின் என் மார்பின் மாலை பொதுமகள் மார்பில் புரளுவதாகுக" என்று வஞ்சினங்கூறினான். இவ் வஞ்சின மொழியால் இவ்வரசன் கற்புநெறி வழுவாது சிறந்து விளங்கினானென்பதை அறியலாம்.

ஆடவரது வீரம்

அக் கால ஆண்மக்கள் வீரம்செறிந்த இயல்பினராய் வாழ்ந்தார்கள். அவர்கள் தம் வாழ்க்கையைத் தொடங்கும்போது வீரத்தின் அடிப்படையிலே துவக்கினார்கள். அக்கால மணவினையும் வீரத்தின் அடிப்படையிலேதான் நடைபெற்று வந்தது. ஆடவர்கள் பெண்கொள்ள விரும்பின், பெண்வீட்டார் அப் பெண்ணோடு வளர்த்த கொல்லேற்றினை ஊர் நடுமன்றத்தில் கொண்டு வந்து நிறுத்துவர். ஆடவன் அதனை அடக்கித் தழுவினால் அவனுக்கு மகிழ்ச்சியோடு பெண் கொடுப்பர். இரவு பகல் என்று பாராது கடல் நடுவில் சென்று மீன் பிடித்து வருதலும், கொடிய விலங்குகள் வாழும் காட்டிற்குச் சென்று விலங்குகளை வேட்டையாடுவதும் போன்ற வீரத்தொழில்களையும் தமது தொழிலாகக் கொண்டிருந்தனர் பழந்தமிழ் மக்கள்.

பண்டைத் தமிழ் வீரர்களுக்குப் போரென்றால் பெருவிருப்பம். அவர்களால் பகைக்கும் நாடு பல்காதத்தொலைவில் இருப்பினும், இடையே பெருங்காடாயினும் போர்புரிய செல்லேம் என்று எண்ணாது பூரித்த உள்ளத்தினராய்ப் போருக்கெழுந்தாரென்பதை,

"போரெனிற் புகலும் புனைகழல் மறவர்
காடிடைக் கிடந்த நாடுநனி சேய
செல்வேம் அல்லேம் என்னார்" (புறம் 31)

என்ற பாட்டால் அறியலாம்.

போருக்குப் புறப்படும் போது சந்து செய்வித் தலினுல் போர் நிறுத்தப்படுமாயின், வீரர்கள் மகி ழாது தம்மில் பொருது சாவோம் எனத் தோள் தட்டுவர் என்று கோவூர்கிழார் கூறுகின்ருர்.

"உட்பகை ஒருதிறம் பட்டெனப் புட்பகைக்கு
ஏவான் ஆகலிற் சாவேம் யாமென
நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்ப" *(புறம் 68)*

என்று கூறுவதன் மூலம் அக்காலத் தமிழ் வீரர்க் குப் போரில் பெருவிருப்பமும், இறப்பதில் அச்சமின் மையும் இருந்தன என்பது நன்கு புலப்படும். எதிர்த்துவரும் வீரர்க்கு அஞ்சாமல் மேன்மேலும் மண்டிச் செல்லும் வீரர் மலிந்த நாடு நம் தமிழ்நாடு. அடிக்கிற கோலுக்கு அஞ்சாமற் பாம்பு மேன் மேலும் மண்டி எழுதலைப்போல எதிர்த்துச் செல் லும் வீரரைப்பற்றிப் பாடுங்கால்,

"எறிகோல் அஞ்சா அரவின் அன்ன
சிறுவல் மள்ளரும் உளரே" *(புறம் 89)*

என்று சொல்லப்படுகின்றது. போரில் புறங்காட்டி ஓடுவாரை மக்களுள்பதடியென்றே தமிழர்கள் கரு தினர். மார்பில் பாய்ந்த வேல் முதுகுபுறமாகச் சென்றுவிடின் புறப்புண்பட்டோமென்று உண்ணு நோன்பினை மேற்கொண்டு உயிர்துறந்தார்கள் பழந் தமிழ் வேந்தர்கள்.

அன்றியும், அம்பும் வேலும் நுழையும் போர்க் களத்தினை வீரர்கள் விரும்பி ஏற்றனரென்பதை,

"அம்பொடு வேல்நுழை வழியெல்லாம் தானிற்கு மன்னே"

என்ற அடியினால் அறியலாம்.

இவ்வாறு வாழ்க்கையிலும், தொழிலிலும், மற்றப் பழக்க வழக்கங்களிலும் வீர இயல்பினைக் கொண்டிருந்த தமிழர்கள் போர்க்காலத்தில் தம் வீரத்தின் முழுத்தன்மையையும் காட்டிவந்தார்கள்.

போர்க்களத்திற்குச் சென்ற காளைபோன்றனது கடமையாவது, மாற்றாரது படையைத் தனது ஒளி பொருந்திய வாளினைக்கொண்டு உழக்கி, களிறெறிந்து வருதலே யாகுமென்று ஒரு வீரத்தாய் கூறுகின்றாள். அது,

**"ஒளிறு வாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே."**

என்பதாகும்.

போர் முனையில் நின்ற ஒரு வீரனைப் பகைவர்கள் சூழ்ந்து கொண்டு பெரும்போர் புரிந்ததைக் கண்ட ஒரு வீரன், பகைவர்களின் நிலை அலறுமாறு தன் வடிமான் எஃகினை ஏந்தி, பிறர் செல்லற்க! செல்லற்க! எனத் தடுத்தும், புனிற்று, கன்றினை நோக்கி ஓடுவது போன்றோடுகின்றான். (புறம். 275)

போர்க்களத்தில் தமர் இவர், பிறர் இவர் என்றறியாதவாறு போர் நடந்தது. அப்பொழுது ஒரு வீரன் மாற்றாரை நோக்கி "நும் தலைவன் பெயரும் உன் பெயரும் தோன்றவேண்டு மென்று விரும்பினால் என்னுடன் பொர வருக. வாழ்நாளில்

வெறுப்புற்றவர்களே வருக" என்று அழைக்கின்ருன். (புறம். 294)

போர்க்களத்தில் கடல் போன்று சேனைகள் மலிந்து போர் நடக்கின்றது. பகைவர்கள் சிறிதும் அஞ்சாத் தன்மையராய் கற்சுவர் போன்று கலங்காது நிற்கின்றனர். அவர்களிடைச் சிறிதேனும் பிளவு உண்டாயின் எவ்வளவோ நன்மை பயக்குமென்று எண்ணுகின்ருன் ஒரு வீரன். இவ்வாறு எண்ண எண்ண அவன் உள்ளம் வேகின்றது. உள்ளத்தின் வெகுளியோ அளவிறந்தது. ஆகவே தன் வேலின் தலையை இங்கு மங்கும் செலுத்தித் தன் உடல் வலிமை முழுமையும் மாற்ருர் மேலாக்கி, அச் சேனையின் முன்னணி பின்னணி யாகுமாறு முன் செல்லுகின்ருன். இவனது போர்த் திறமையைக் கண்ட பகைவர்கள் கூடி இவனை எதிர்க்கின்ருர்கள். இவன் அஞ்சா நெஞ்சத்தனுய் மீண்டும் உள் நுழைகின்ருன். இவனுக்குதவியாக மற்றவர் பின்னுல் வராதொழியவே இவன் பகைவர்களால் தன் உருவம் தெரியாவண்ணம் சிதைக்கப்படுகின்ருன். இங்ஙனம் சிதைந்து வேருகிய தன் மகனின் மாண்பினைக் கண்ட பெற்ற தாய்க்கு அருவி போன்று மார்பில் பால் சுறந்தது. (புறம். 295) இதனுல் நாம் ஆடவரது வீரத்தினையும் மடவாரது வீரத்தினையும் ஒருங்கே காணுகின்ருேம். மேற்கண்ட செயல்களைக் காணுகின்ற காலத்து இத்தகைய ஆடவர்களது ஆண்மை அளவிடப்போமோ?

அன்று மக்களைக் காத்துவந்த மன்னர்களும் வீரத்தன்மை உடையவர்களாய் விளங்கி இருந்தனர்.

அவர்கள் உள்ளத்தே எஞ்ஞான்றும் போர் நினைவே பொலிவுற்றிருந்தது.

மன்றத்தில் தண்ணுமைத் தூக்கப் பெற்றிருக்கின்றது. காற்று வீசுதலினால் அம்முழவு ஒலி செய்கின்றது. அவ்வொலியினைக் கேட்ட மன்னன் எதிரிகளின் போர்ப்பறை யென்றெண்ணிக் கிளர்ச்சி பெறுகின்றான். இதனால் போரில் வேந்தரின் சிந்தை ஆழ்ந்திருந்ததென்பது நன்கு புலனாகின்றதல்லவா?

போர் நடக்கின்ற காலத்து அரசர்கள் தம்மைக் காத்துக்கொள்ளும் பொருட்டுத் தனியிடம் புகார். வீரருள் ஒருவனாய்த் தம்மையும் எண்ணிக்களம் புகுந்து வீரப்போர் புரிவர்.

இவ்வாறு வீரப்போர் புரிந்தவரில் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் ஒருவனாவன். இவன் இளைஞன் என்பதைக் கண்ட வேந்தர்கள் இவனை எள்ளி நகையாட முற்பட்டனர். இதனை அறிந்த நெடுஞ்செழியன், கிண் கிணி களைந்த தன் காலில் வீரக்கழலைக் கட்டி, குடுமி களைந்த தன் தலையில் வேப்ப மாலையைச் சூடி, வளை கழற்றிய தன் கையிலே வீரவில் பிடித்து, தனது நெடிய தேரின் கொடிஞ்சி பொலிய நின்று, தான் ஐம்படைத்தாலி அணிந்த தோற்றத்தோடு போர்க்களம் புகுந்தான். தன் மேல் மாறுபட்டு முறை முறையாக வந்த மறவர்களை மதித்தலும் இலன், அவமதித்தலும் இலன், எதிர்த்து வந்தோரை இறுகப் பிடித்து வானவெளியின் கண்ணே ஒலியெழக் கவிழ்ந்து மண்ணில் தோய அடித்துக் கொன்றதற்கு மகிழ்ந்ததும் இலன். செயற்

கரிய செயல் செய்தோமென்று தன்னை மிகுத்தது அதனினும் இலன். இளமையின் கண்ணே இச்செயல் செய்தானென்றால் இவனது வீரத்தினை என்னென்றியம்புவது! (புறம். 77)

அதியமான் போர்க்களத்தில் தன் மாற்றாரோடு போர் புரிந்து பாசறையினுள் நுழைந்தான். தனக்குத் தவமகன் பிறந்துள்ளானென்ற செய்தி அறிந்து தன் மனையகம் சென்று தவ மகனைக் கண்டான். புதல்வன் பிறந்தவுடன் அப்புதல்வனைப் பார்த்து மகிழவேண்டுமென்பது தருமநூல் விதி. ஆனால் இவனோ கையின் கண் வேலும், காலில் வீரக்கழலும், உடம்பின் கண் வியர்வையும், பகைவர்களின் அம்பு பட்டதால் மார்பின்கண் பசிய புண்ணையும், தலையில் வெட்சியோடு வேங்கை மலரை விரவி கட்டிய மலர்மாலை சூட்டப் பெற்ற தோற்றத்தையும் உடையவனாய்ப் போர்க்களத்தில் பகைவர்களைச் சீற்றங்கொண்டு நோக்கிய போது சிவந்த கண்கள், தன் செல்வச் சிறு மகனை நோக்கிய பின்பும் சிவப்பு மாறாவாயின. (புறம். 100)

இவ்வாறு பண்டைக்கால அரசர்கள் வீரம் மிக்கவர்களாக விளங்கினார்கள்.

மகளிரது வீரம்

அக்கால மகளிரது வீரச் சிறப்பினை இன்று எண்ணுகின்ற போது இறும்பூதெய்த வேண்டியுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இப்படிப்பட்ட பெண்டிர்களும் தமிழ் நாட்டில் இருந்தனரோ என்று வியப்பெய்தும் நிலையில் நம் தமிழ்ப் பெண்கள் விளங்கியுள்ளார்கள். அவர்கள் போர்க்

களத்திற்குச் சென்று பகைவரோடு வாளெடுத்துப் போர்புரிதல் இல்லையாளுலும், போரில் புறங்கொடாது மார்பில் விழுப்புண்பட்டு விளங்க வேண்டுமென்று தன் புதல்வர்க்கு வீரத்தினை ஊட்டிவந்தார்கள். குடிபுரந்தோம்பிய கொற்ற வேந்தர்க்காக, வேல்கைக் கொடுத்து வீரப்போர் செய்துவருமாறு கொண்ட கொழுநனைப் போர்க்களத்திற்கு அனுப்பி வந்தார்கள் அக்காலப் பெண்டிர்கள்.

அன்றியும் அரசனது போர்வெற்றியைப் புகழ்ந்து பாடுதலும், அமர்க்களத்தில் அகம் குன்றி நின்றோனைப் பார்த்து அவனது சிறப்பியல்புகளை எடுத்துக்கூறி அவனைப் போர்செய்ய ஊக்குவித்தலும், போர்க்களத்தில் இறந்துபட்ட மகனைப்பார்த்து பிறந்த நாளினும் பெரிதுவத்தலும், தன் கணவனோடு தானும் தீயெரிபுகுதலும் தம் இயல்பாகக் கொண்டிருந்தனர் அக்காலத் தமிழ்ப் பெண்கள். பின்வரும் நிகழ்ச்சிகள் பெண்களது வீர இயல்பினை விளங்கக் காட்டும்.

மூத்து நரைமுதிர்ந்த—மூப்பெய்திய — மூதின் மகளிர் மாற்றானின் கைக்குத் தன் நாடு செல்லாதவாறு காக்கத் தன் மகனை அனுப்பினாள். மகன், மாற்றானின் படைக்கு உடைந்து புறமுதுகுகாட்டி ஓடினான் என்ற பழிச்சொல்லைச் சிலர் கூறக்கேட்டாள் ஒரு வீரத்தாய். மாற்றானின் படைக்கு உடைந்து புறமுதுகு காட்டுவது தன் மறக்குடிக்கு இழிவல்லவா! அவ்விழிவை ஏற்படுத்திய தன் மகன்மேல் சினங் கொண்டாள். வாளினைக் கைக்கொண்டு என் மகன் மாற்றானின் படைக்குப் புறமுதுகுகாட்டி இருப்

பாறுயின் அவன் பால் உண்ட என் மார்பினை அறுத் திடுவேனென்று போர்க்களம் புகுந்தாள். மலை போல் குவிந்து கிடக்கும் அப்பிணக்குவியல்களிலே தன் மகன் எங்குளான் என்பதை அறிய வாள் கொண்டு பிணக்குவியலைப் புரட்டினுள்; தேடினுள். விழிப்புண்பட்டு இரு பிளவுற்றுக் கிடக்கும் தன் மகனைக் கண்டாள். அப்பொழுது அவனைப் பெற் றெடுத்த நாளினும் பேர் உவகைக்கொண்டாள் அப் பெருமூதாட்டி :—

நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்ருேள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க்(கு) உடைந்தன ஞயி னுண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே ருகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.

(புறம் 278)

பல நாட்களாகப் போர் நடக்கின்றது. வெற்றி இன்னுர்க்கென்றறியாதவாறு இருதிசை வீரர்களும் வீரப்போர் புரிகின்றனர். அவ்வீரக்களத்திற்குத் தன் குடிக்காக முதல் நாள் தன் அண்ணனை அனுப் பினுள் ஒரு வீரத்தாய். அண்ணனும் அயர்வுருது அயலாரது யானையை எறிந்து களத்தொழிந்தனன். அதனைக்கேள்வியுற்றும், அவள் மறு நாள் தன் மனத் தகத்து வாழும் மணுளனைச் செருமுகம் நோக்கி விடுத் தாள். சென்ற கொழுநன் பெரும் படைகளை விலக்கி

அப்படைகளினுலே ஆண்டுப்பட்டனன். இன்னும் போர் நீங்கிய பாடில்லை. அதற்கு மறு நாளும் செருக் களத்தில் செருப்பறை கேட்டு விருப்புற்ருள். விருப் புற்ற அவள் வீரகளத்திற்கு அனுப்ப ஆளில்லையே என்று தயங்கினுள். பால்மணம் மாருப் பச்சிளஞ் சிறுவனுகிய தன் மகன் ஒருவன் உளனென்று அவள் நினைவிற்கு வந்தது. அன்பொழுக அவள் மகனை அழைத்து, பாறு மயிர்க்குடுமிக்கு எண்ணெய்நீவி, வெள்ளாடை விரித்துடுத்தி, வேல் கைக்கொடுத்து வீர மகனே செருமுகம் நோக்கிச் செல்கவென விடுத்தாள். (புறம். 279)

இவள் வீரத்தினை என்னென்று இயம்புவது! தன் குடிக்கு ஒரே மகன் உளனென்பதறிந்தும், அவள் உள்ளம் சிறிதும் மாறுபடாது செறுமுகம் சென்று செறுவரை அடக்கித் தன் நாட்டைக் காப்பாற்றுவதே தகவுடைத்தென்று அவ்வீரத்தாய் எண்ணினுள்.

ஒரு தாயினிடத்து வந்து ஒருவர் தூணைப்பற்றி நின்று நின்மகன் யாண்டுளனென்று வினவ, அதற்கு அத்தாய், புலி உறைந்துசென்ற கன்முழை போல அவனைப் பெற்றெடுத்த வயிருே இதுவே. இப்பொ ழுது அவனைக் காணவேண்டின் போர்க்களத்திற்குச் சென்ருல் காணலாம் என்ருள் :—

" சிற்றில் நற்றூண்பற்றி நின்மகன்
யாண்டுள னேவென வினவுதி யென்மகன்
யாண்டுள னாயினு மறியேன் ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிருே இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே."

(புறம் 86)

மற்றொருதாய் தன் கடமை எதுவென்றும், தன் மகன் கடமை எது வென்றும் கூறுகின்றாள் :—

" ஈன்றுபுறந் தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறு வாள் அருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே."

(புறம் 312)

இவ்வாறு அக்காலத்தில் பல வீரத்தாய்மார்கள் போரென்றால் அஞ்சுவதின்றிப் பூரிக்கும் நெஞ்சமும், புன்முறுவலும் கொண்டு விளங்கினார்கள்.

வீரமும் மானமும்

மறப்பண்பு வாய்ந்த மன்னர்கள் மானம் உடையவர்களாக விளங்கினார்கள். தன் வீரத் தன்மைக்கு இழுக்கு வருமாயின் இவ்வுலகத்தில் இருக்க அவர்கள் இசையார். "மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார், உயிர்நீப்பர் மானம் வரின்" என்று வள்ளுவப் பெருந்தகையாரின் திருவாக்கிற்கு இலக்கியமாகப் பழங்கால வேந்தர்கள் மானங்கெடவரும் செயல்களைச் செய்யாது மாய்ந்தொழிந்தனர். வீரமும் மானமும் அக்காலத்தமிழரின் குருதியுடன் கலந்து வளர்ந்த இயற்கைப் பண்பாகும். மானத்தினும் பெரிய அறனும் பொருளும் இன்பமும் இல்லையென்பது தமிழர்கள் முடிவு.

தன் மைந்தர் அறநெறிக்கு மாறுபட்டுத் தன் மேல் படையெடுத்து வந்ததைப் பார்த்து வெகுண்ட

வேந்தன், அவர்களோடு போர்செய்யப் புறப்பட்டான். புறப்பட்ட கோப்பெருஞ்சோழனைப் புல்லாற்றூர் எயிற்றியனார் பார்த்துப் பின்வருமாறு கூறுகின்றார்.

"விறல் கெழு வேந்தே! நின்னோடு பொருதற்கு வந்த இருவீரும் நினது பகைவர்களல்லர்; நீயும் அவர்களுக்குப் பகைவனல்லை. நீயோ பரந்துபடு நல்லிசை எய்தி வானோர் உலகம் எய்தியபின் உனதரசு அவர்களுக்குரியதென்பதையும் நீ அறிவாய். அன்றியும் அவர்களோடு பொருது நீ வென்றபின் நினது அரும் பெரும் செல்வத்தை யாரே அனுபவித்தற்குரியவர்? அன்றி அவரோடு பொருது நீ தோற்பாயாயின் பகைவர்கள் உவப்பப் பழியை இவ்வுலகத்தில் நிறுத்துவாய். ஆதலால் ஒழிக நின் மறனே." இங்ஙனம் உணர்த்திய பின் உள்ளத்திற் பொங்கியெழுந்த சினம் "இடுநீற்றாற் பையவிந்த நாகம்போல்" அடங்கியது.

எனினும் "மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே" என்பதை மன்னன் அறிவானாகலின், உயிர்வாழ விருப்பமிராது வடக்கிருத்தலை மேற்கொண்டான். வடக்கிருத்தலாவது யாதேனும் இன்றியமையாத காரணம் பற்றி உயிர் துறக்கத் துணிந்தவர், ஆற்றிடைக்குறைபோன்ற தூயதொரு தனியிடத்தை எய்தி, வடக்கு நோக்கியிருந்து, உண்ணா நோன்பொடு, கடவுட் சிந்தையுடன் உயிர்விடுதலாகும். இதனையே கோப்பெருஞ் சோழன் மேற்கொண்டு உயிர் துறந்தான்.

பெருஞ்சேரலாதன் கரிகாற் பெருவளத்தானோடு போர்செய்து தோற்றான். போர் செய்கின்ற காலத்துக் கரிகாற்பெருவளத்தானால் வீசப்பட்ட வாள் மார்பில் உருவிப் பின் சென்று புறப்புண்ணை உண்டாக்கியதால், அப்புறப்புண்ணிற்கு நாணிய பெருஞ்சேரலாதன் வாளோடு வடக்கிருந்து பட்டினியால் உயிர் விட்டான்:—

"புறப்புண் ணாணி மறத்தகை மன்னன்
வாள்வடக் கிருந்தனன்.........." (புறம். 65)

சோழன் செங்கணானோடு சேரமான் கணைக்கால் இரும்பொறை போர்புரிந்து தோற்று அவனிடத்தில் சிறைப்பட்டான். சிறைப்பட்ட வேந்தன் உண்ண உணவின்றி, குடிக்க நீரின்றிச் சிறையிற் கிடந்து தவிக்கும் தருவாயில் நீர் வேட்கை மிக, அருகிலிருந்த காவலாளரை நீர் கொணரும்படி வினவினான். அதற்குக் காவலாளர் மதியாது காலங் கடந்து நீர் கொணர்ந்து கொடுக்க, அதனைக் குடியாது பின்வருமாறு கூறி இறந்தான்.

"குழவி யிறப்பினும் ஊன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளில் தப்பார்
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
ஈன்ம ரோவிவ் வுலகத் தானே." (புறம். 74)

இத்தகைய மானமுள்ளவர்களாக அக்கால மன்னர்கள் விளங்கினர்.

வீரத்தில் அறம்

மறக்குடியில் பிறந்த மறவர்களும், வீர வாழ்க்கை வாழ்ந்து வீரப்போர் புரிந்த வேந்தர்களும் போர் செய்யுங்காலத்தும், போர் தொடங்கும் காலத்தும் அவர்களிடத்தில் அறமே தலைசிறந்து நின்றது. போர் குறித்து இருபாலும் மண்டி நிற்கும் வேந்தரை "அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்" என்று கழாத்தலையார் என்னும் சான்றோர் சிறப்பித்துக் கூறுகின்றார்.

அரசர்கள் யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகிய நால்வகைப் படைகளையும் வீறு பெறக் கொண்டிருப்பினும், அரசர்களின் வெற்றியெல்லாம் அறத்தையே அடிப்படையாகக் கொண்டு மிளிர்ந்தன வென்பதை மருதனிளநாகனார்.

"கடுஞ்சினத்த கொல்களிறுங் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரு நெஞ்சுடைய புகன்மறவரும் என
நான்குடன் மாண்ட தாயினு மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்"

(புறம். 55)

என்று கூறுகின்றார.

மன்னன் மாற்றார்மேல் போர் தொடங்குகின்ற காலத்தே அறநெறியோடு போர்தொடங்கினன். போர் செய்யப் புகும் வேந்தன் பகைவர் நாட்டிலுள்ள உயிர்களைப் பாழாக்குவதில்லை. பசுக்களையும், பார்ப்பாரையும், பெண்களையும், பிணியுற்றோரையும்

இவர் போன்ற பிறரையும் போர் நிகழும் நிலத்தே விட்டுப் புறத்தே போகும்படி பறையறைந்த பின்னரே பகைவர் நாட்டில் புகுவான். இத்தகைய அறப்போர் முறை பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதியிடம் அமைந்திருந்ததாக நெட்டிமையார் என்ற புலவர் பாராட்டுகின்றார்:—

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெருஅ தீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மினென
அறத்தாறு நுவலும் பூட்கை........"

(புறம். 9)

அன்றியும் போர்க்களத்தில் வீரர் அல்லாதார் மேலும், புறங்காட்டி ஓடுவார் மேலும், புண்பட்டார் மேலும், முதியோர், இளையோர் ஆகிய இவர்கள் மேலும் படைக்கலம் செலுத்தல் ஆகாது என்பது பண்டைத் தமிழர்கொண்ட அறநெறியாகும். இத்தகையோர் மேல் படைக்கலம் செலுத்தலை "படைமடம் படல்" என்று அறிஞர்கள் பழித்துரைப்பார்கள். வையாவிக்கோப் பெரும்பேகனைப் புகழ்ந்துரைற்ற பரணர் என்னும் பாவலர்

"வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்காற் பேகன்
கொடைமடம் படுதல் அல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே."

(புறம். 142)

என்று பாராட்டுகின்றார். கொடைமடம் என்பது இரப்போர்க்கும், இரவாதவர்க்கும், உள்ளவர்க்கும்,

இல்லவர்க்கும் வரையாது வழங்குதலே யாகும். இத்தகைய கொடைமடமேயன்றிப் படைமடம் என்பது அவனிடத்தில் இல்லையென்று அரும்பெரும் புலவர் கூறியுள்ளார்.

தம்மோடு மாறுபட்டு எதிர்நின்று பொரும் வேந்தன் அஞ்சியபோது அவனை எதிர்ப்பது வீரமன்று. பகைவேந்தர் போந்து முற்றுகையிட்டுக் காவல் மரத்தைத் தடியும்போது தறுகண் இன்றி அஞ்சித் தம் அரணிடத்தே வேந்தர் மடிந்திருப்பரேல் அவரோடு பொருவது மானமிக்க மறத்தமிழ் வேந்தர்க்கு நாணுடைய செயலாகும்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், கருவூரில் மதிலுக்குள் மடிந்திருந்த வேந்தனை விட்டொழியாது முற்றுகையிட்டுப் பொருது அழிக்கலுற்றதை அறிந்த ஆலத்தூர்கிழார் என்னும் அறிஞர்.

"வீகமழ் நெடுஞ்சினை புலம்பக் காவுதொறும்
கடிமரந் தடியு மோசை தன்னூர்
நெடுமதில் வரைப்பிற் கடிமனை யியம்ப
ஆங்கினி திருந்த வேந்தனொ டீங்குநின்
சிலைத்தார் முரசங் கறங்க
மலைத்தனை யென்பது நாணுத்தக வுடைத்தே."

(புறம். 36)

என்று இடித்துக் கூறுகின்றார்.

சோழன் நலங்கிள்ளி யென்பவன் நெடுங்கிள்ளியின் உரிமை ஊரான ஆவூரை முற்றுகையிட்டான். நெடுங்கிள்ளியோ எதிர்க்க ஆற்றலின்றி நீண்ட மதிலினுள் ஒடுங்கிக் கிடந்தான். முற்றுகை பல நாள்

நீடித்தது; மதிலினுள் இருந்த மக்களோ பசியினால் மடிந்தார்கள்; குழவிகள் குடிக்கப் பாலின்றி அழுதன; கொய்தளிர் பூவின்றி மகளிர் வறிதே கூந்தலை முடித்தனர்; குடிமக்கள் நீரின்றி வாடினர்; மக்கள் அல்லலைப் பொறுக்காது அரற்றினர்; மக்களின் அழு ஒலிகேட்ட மன்னன் வெளிவராது மதிலினுள் ஒடுங்கிக் கிடந்தான். இதனை அறிந்த கோவூர்கிழார் நெடுங்கிள்ளியினிடத்துச் சென்று வேந்தே! இச்செய்கைக்குச் சிறிதும் நாணாது நீமட்டும் இனிதே வாழ்வது அறமுடைய செயலா? அறத்தை உடையையாயின் பகைவனிடத்துச் சென்று இவ்வூர் நினதென்று சொல்லிப் போரை நிறுத்து. மறமுடையவனாயின் மாற்றான்மீது சென்று போர் தொடுப்பாயாக. அறமும் மறமும் இன்றி நீண்ட மதிலினுள் ஒருபுறம் ஒடுங்கிக்கிடப்பது நாணுத்தகவுடைத்தே என்று அறமில்லாத்தன்மையை எடுத்துக்காட்டி அறத்தினை நிலைநிறுத்தினார்.

''இன்னா தம்ம வீங்கினி திருத்தல்
துன்னருந் துப்பின் வயமான் தோன்றல்
அறவை யாயி னினதெனத் திறத்தல்
மறவை யாயிற் போரொடு திறத்தல்
அறவையு மறவையு மல்லை யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்
நீண்மதி லொருசிறை யொடுங்குதல்
நாணுத்தக வுடைத்திது காணுங் காலே''

(புறம். **44**)

இவ்வாறு அறமலிந்த வீரம் பண்டைத்தமிழ் நாட்டில் விளக்க முற்றிருந்தது.

இதுகாறும் கூறியவாற்றால் ஆடவர், மடவார் ஆகிய அனைவரும் அக்காலத்தில் வீரம் மிக்கவராய்

விளங்கினரென்பதை அறியலாம். "ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும், புதுவதன்றிவ்வுலகத்தியற்கை" என்னும் உண்மையே தம் வாழ்க்கையின் தத்துவமாக அக்காலத் தமிழர்கள் கொண்டிருந்தனர். அதனால் பண்டைத்தமிழகம் வீரம் செறிந்த நாடாக விளங்கிற்று. தமிழரும் வீரம்மிக்கவராய் விளங்கினர். நாடும் வேற்றுநாட்டவர்க்கு அடிமையிலாது வாழ்ந்தது.

2. கொடை

கொடைப் பண்பு

பண்டைத் தமிழ்நாடு பல்வளம் பெற்றுப் பெரு நாடாக விளங்கியது. அத்தமிழ் நாட்டில் செல்வம் படைத்தோர் பலர் இருந்தனர். அவர்களில் பலர் வள்ளல்களாய்த் திகழ்ந்தனர். செல்வம் படைத்தோமென்ற செருக்கு அவர்கள்பாலில்லை. "செல்வத்துப் பயனே ஈதல்" என்பதை அவர்கள் நன்கறிந்தவர்களாதலால், செல்வம் தமது உடைமையென ஒரு போதும் அவர்கள் எண்ணியவர்களல்லர். ஆதலின் செல்வம் பெற்றோர் பொருளாளராக விளங்காமல் கொடையாளராக விளங்கினார்கள்.

பசித்துன்பம் அலைக்கும் நாடு பண்பாடெய்தாது. "ஆகையால் பசியினைப் போக்குவதற்கே தம் செல்வம் முழுமையும் பயன் படுத்திவந்தனர். செல்வம் படைத்தோர் வறுமையைப் போக்குவதற்குத் தம் செல்வம் முழுமையும் பயன்படுத்தியதால் வள்ளல்கள் என்று அழைக்கலானார்கள். சான்றோர்களால் இவர்கள் பாராட்டப்படுகின்ற காலத்தும், இவர்களது மாட மாளிகையையும் மதிப்பற்ற செல்வங்களையும் பாராட்டுதலின்றி பசியெனல் அறியாப் பணைபயில் இருக்கை" என்றே பாராட்டப் பெற்றனர்; "பசிப்பிணி மருத்துவனென்றும்," "பாண்பசிப் பகைஞன்" என்றும் தாம் அறிந்த வள்ளல்களைப் புலவர்கள் போற்றி வந்தனர்.

இவ்வாறு செல்வம் படைத்தோர் பெருங்கொடையாளராக விளங்கியதனால்தான், இரப்பவர்களும்

இரத்தல் இழிவுடைத்தென்று எண்ணுதிருந்தனர். இரவச்சம் அவர்கள்பால் இருந்தாலும் அது வளராத படி வள்ளல்கள் திகழ்ந்தனர்.

"இன்பம் ஒருவர்க்கு இரத்தல் இரந்தவை
துன்பம் உருஅ வரின்"

என்று திருவள்ளுவர் கூறியாங்கு இரவோர் இரத்தலை இன்பமென்று கொண்டனர். ஈவோர் இரப்போர்கள் மருளுமாறு பொருள்களை ஈந்தனர்.

தன்னை நாடிவரும் இரவலர்க்குச் செல்வக் கடுங்கோ வாழியாதன் களிறு, குதிரை, பசு, களமரொடு களம் ஆகிய இவற்றைத் தன்பெருமையின் தகுதி நோக்கிக் கனவோ, என மருட்சி எய்துமாறு ஈந்தான் என்பதை,

என்ற பாடலால் அறியலாம்.

"தன்பெருமையின் தகவுநோக்கிக்
குன்றுறழ்ந்த களிறெனன்கோ
கொய்யுளைய மாவென்கோ
மன்றுநிறையு நிரையென்கோ
மனைக்களமரொடு களமென்கோ

இவ்வாறு அளிக்கும் வள்ளல்கள் இருந்ததினுல் தான் புலவர்கள் இரத்தலை இன்பமென்று கருதினர்.

நாஞ்சில் வள்ளுவனென்பவன் தன்னை நாடிவரும் இரவலர்க்கு இல்லையென்று கூருது ஈயும் இயன்புடையவன். அவனிடத்து அடகின் கண்ணுறையாக சில அரிசிவேண்டி ஒளவையார் சென்ருர். அவனே ஒளவையாரின் பெருஞ்சிறப்பினை அறிந்தவன். ஆதலால் அவரது வறுமையை நோக்கியதோடு, அவர் பெருமையை

யும் நோக்கிக்குன்ற மன்னதோர் யானையைப் பரிசி லாகக் கொடுத்தான், அவனது கொடைச்சிறப்பினைக் கண்டு ஔவையார் வியந்தார். "ஒருவர்க்கு ஒன்றைக் கொடுக்குமுன் அவர்களது தகுதி அறிந்து கொடுத்தல் வேண்டும். பெரியோர்கள் தாங்கள் செய்யத் தகும் முறை அறிந்து செய்யார் போலும்" என்று அவனது வள்ளன்மையைப் பாராட்டினர் :—

"அடகின் கண்ணுறை யாக யாஞ்சில
அரிசி வேண்டினெ மாகத் தான் பிற
வரிசை யறிதலிற் றன்னுந் தூக்கி
இருங்கடறு வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறு நல்கி யோனே யன்னதோர்
தேற்ற ஈகையும் உளதுகொல்
போற்ற ரம்ம பெரியோர்தங் கடனே."

(புறம். 140)

இவ்வாறு பெரும் அளவில் பொருளை வழங்கிய வள்ளல்களிடத்துப் புலவர்கள் பரிசில் வேண்டிப் பன்முறை சென்றனர். பன்முறை வந்துற்றனரே இவர்களென்று அவர்கள் உள்ளம் எப்பொழுதும் மாறுபட்டதில்லை. முதல்நாள் கண்ட முகமலர்ச்சியே பன்முறை சென்றபோதும் கண்டனராம்.

ஔவையார் அதியமானிடத்துப் பரிசில்வேண்டி சென்றார். அதியமான் ஏதோ அலுவல் காரணமாக ஔவைக்குப் பரிசில் அளிக்கக் காலம் நீட்டித்தான். அதியமான் என்றும் இவ்வாறு காலம் தாழ்த்தியது இல்லையே என்று அவரது உள்ளம் வருந்திற்று. வருந்திய உள்ளத்தைப் பார்த்துப் பின்வருமாறு கூறினர்.

"அவனது கொடைப்பொருளை அருந்துவதற்கு விரும்பிச்சென்ற நெஞ்சமே நீ ஏன் வருந்த வேண்டும். நீ அவன்பால் ஒருநாள் மட்டுமா சென்றனை? பலரொடு சென்று பலநாள் அவனொடு பழகியுள்ளாய் அல்லவா! பன்முறை அவன்பால் சென்ற போதும், முதற்கண் கண்ட முகமலர்ச்சியைத்தானே எப்பொழுதும் கண்டாய். யானை தன்கோட்டிடை வைத்த கவளம் போல்வது அவனது கொடைப் பொருள். ஆதலின் அதியமான் பரிசில் கொடுக்கக் காலம் இன்னும் நீட்டினும், நீட்டாதாயினும் அவனது பரிசில் நம் கையகத்தது. இது பொய்யாகாது. ஆதலின் நெஞ்சே நீ வருந்த வேண்டா. வாழ்க அவன்தாள்" என்று வாழ்த்தினர்.

ஔவையார் இவ்வாறு அதியமானை வாழ்த்துவதன்மூலம் அவனது கொடைப் பண்பினை விளக்குகின்றார்.

இரவலர்க்குப் பொருள் வழங்குவதிலும் ஓர் தகுதி வேண்டும். தகுதி அறிந்து ஈதல் இல்லையாயின் புலவர்கள் அப்பொருள்களை மதியார். கடையேழு வள்ளல்களில் காரியும் ஒருவன். அவனது வள்ளல் தன்மை இன்ன முறையில் அமைய வேண்டுமென்று கபிலர் இடித்துக் கூறுகின்றார்.

"ஒரு திசைக்கண் வாழும் வள்ளலை நோக்கி, நாற்றிசையிலுமுள்ள பரிசின் மாக்கள் பலரும் வருவர். பரிசிலர்க்கு ஈதல் எளிது. அவர்களின் வரிசை நோக்கி ஈதல் அரிது. அதனை நீ நன்கறிந்து புலவர் மாட்டு பொது நோக்கொழிமதி" என்று எடுத்துக் கூறுகின்றார்.

பெருஞ்சித்திரனார் என்பவர் பெரும் புலமை வாய்ந்தவர். அவரது குடும்பம் வறுமையால் வாடியது. வறுமையைப் போக்க வேண்டி வெளிமானிடத்துச் சென்றார். வெளிமான் தன் தம்பியைப் பரிசில் கொடுவெனப் பணித்தான். தம்பியோ கொடைத் தன்மை அறியாதவன். பொருளைப் பேணி வைப்பதில் பெருவிருப்பம் உடையவன். ஆதலின் பெருஞ்சித்திரனாரின் பெருமை அறியாது சிறிது பொருள் கொடுத்தான். பெருஞ்சித்திரனார் அதை வாங்க மறுத்துக் குமணன்பால் சென்றார்.

கொடையிற் சிறந்து விளங்கியவன் குமணன். குமணன் பெருஞ்சித்திரனாரின் பெருமையை நன்கறிவானாதலால் பெரிய நல்யானை ஒன்றை ஈந்தான். அக்களிற்றினைக் கொண்டு வந்து வெளிமானின் காவல் மரத்து யாத்துச் சென்று வெளிமான் தம்பியிடம் சென்றார். அவனை நோக்கிப் பின்வருமாறு கூறினார்.

"ஐய! நீ ஒருவன்தான் இவ்வுலகில் புரவலனோ? அல்லை. இரப்பவரைப் புரப்பவர்க்கு உலகில் பலருளர். இரவலர் உலகில் உள்ளதுபோலவே, அவர்க்கு ஈயும் புரவலரும் உளர். அதனை நீ அறிய வேண்டுமாயின் நின்னூர் கடிமரத்தைச் சென்று காண்பாயாக. அம் மரம் வருந்தும்படி பிணித்துள்ள நெடு நல்யானை யாம் பெற்று பரிசில் என்பதனை நீ உணர்வாயாக" என்று இடித்துரைத்தார்.

இதனால் புலவர்கள் வறுமையுற்ற போதும் தம் பெருமை நிலையினின்றும் இழியாது வாழ்ந்தார்கள்.

பரிசிலர் காலமல்லாத காலத்தில் சென்றாலும் இல்லையென மறுத்தல் செய்யார் ஈவோர். பரிசில்

பெறுவதற்குச் செல்லுங்காலை பல தீய சகுனங்கள் தடை செய்யினும் சென்றால் ஈவானோ, இல்லையென்பானோ என்று ஐயப்பாடு தோன்றுவதில்லை.

எப்பொழுது சென்றாலும், எவை தடை செய்தாலும் இல்லையென்று திரும்பியவர் எவருமிலர். கொடையாளர்களும் பரிசிலர் கொள்ளும் காலம் இதுவென வரையறுத்தல் செய்யார். எக்காலத்தில் செல்லினும் அவர்கள் இன்முகங் கொண்டு வரவேற்று வறுமை நீங்கப் பொருள்களை வழங்கி வந்தனர்.

மலையமான் திருமுடிக்காரியின் மலையினைப் பாடிச் சென்ற பரிசிலர்கள் காலமல்லாக் காலத்தில் சென்றாலும், காலம் இது நன்றன்று என அறிவிக்கும் புள் நிமித்தம் கண்டு சென்றாலும், அன்றி அவனது சிறப்பியல்புகளை அறிந்து புகழ்தல் செய்யாதவராயினும், அவனிடத்துச் சென்றவர்கள் வறிதே மீண்டு வந்தனர் அல்லர் என்பதை,

''நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குந ரல்லர் நெறிகொளப்
பாடான் றிரங்கு மருவிப்
பீடுகெழு மலையற் பாடி யோரே'' (புறம். 124)

என்று கபிலர் காரியினிடத்துச் சென்று பாடிய பாட்டால் அறியலாம்.

இளங்கண்டீரக்கோவும், இளவிச்சிக்கோவும் ஒருங்கிருந்தவழி பெருந்தலைச் சாத்தனார் சென்றார். இளங்கண்டீரக் கோவைப் புல்லி இளவிச்சிக்கோவைப் புல்லாராயினார். இளவிச்சிக்கோ புலவரை நோக்கி,

புலவரே! என்னைப் புல்லாததற்குக் காரணம் யாதோ வென வினவினன். அதற்குப் புலவர் இளங்கண்டீரக் கோவின் இல்லும் வள்ளல் தன்மைப் பெற்றுள்ள தென்பதை,

> "கிழவன் சேட்புலம் படரின் இழை அணிந்து
> புன்றலை மடப்பிடி பரிசி லாகப்
> பெண்டிருந் தம்பதங் கொடுக்கும் வண்புகழ்க்
> கண்டீ ரக்கோ னாகலின்........................"

என்று பாடி இளவிச்சிக்கோவுக்கு விளக்கினர். இதனால் இல்லில் உறையும் பெண்டிரும் தம்பதங் கொடுக்கும் பெட்புடைமை பழந்தமிழ் நாட்டில் நிலவியதென் பதை அறிகின்றபொழுது உள்ளம் பூரிக்கும் பூரிப் பினை என்னென்று இயம்புவது!

இவ்வாறு பழந்தமிழ்நாடு வள்ளல் தன்மையில வளம் பெற்று இருந்தது. வறிஞர்க்கு வாழ்வையும் அளித்தது. ஆனால் அதே தமிழ்நாட்டில்தான் வறுமையின் உச்ச நிலையையும் காணுகின்றோம்.

வறுமை நிலை

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்" பண்பு வாய்ந்த வள்ளல்கள் வாழ்ந்த நாட்டிலும் பசிப்பிணி பரிசிலரை வருத்திற்று. பரிசிலர் என்பவர் இக்காலத்தவர் போல வாழ்விழந்து அலையும் பிச்சைக்காரர்களல்லர். பெற்ற தாயும் தந்தையும் இறந்தபின் பேணுவாரின்றி அலையும் அனாதைகள் போன்றவர்களல்லர். செய்யும் தொழில் கிடையாமல் செய்வதொன்றும் அறியாமல் தேயங்கள் தோறும் சென்று இரந்து உயிர்வாழும் ஏழைகள் போலல்லர். மற்று இவர்கள் யாவரோ வெனின்?

கலைஞர்களாவர். அறிவுக்கலை, இசைக்கலை, நாடகக் கலை ஆகிய இம் முக்கலையும் வளர்த்த புலவரும்; பாணரும் கூத்தருமாவர் கலைக்காகவே இவர்கள் உயிர் வாழ்ந்தவர்களாதலின் வயிற்றுக் கவலையைப் பற்றி எண்ணுது வாழ்ந்தார்கள்.

அக்காலத்தில் வாழ்ந்தவர்களனைவரும் கலையுணர்வுற்று விளங்க முடியவில்லை. இக்காலத்தைப் போல இயந்திர உதவி கொண்டு கலையை எங்கணும் பரப்பி எளிதில் நுகரும் வாய்ப்பு அக்காலத்தவர்க்கு இல்லை. ஆதலின் ஒரு சிலரே கலையுணர்வுற்று விளங்க முடிந்தந்தது. அவர்களிலும் அரசரும் செல்வருந்தான் கலையை நுகர்வதற்குரிய வாய்ப்பைப் பெற்றிருந்தனர். அவர்களே கலையையும் வளர்த்து வந்தார்கள். கலைஞர் என்ற ஒரு வகுப்பினரும் தனியாக வாழ முடிந்தது.

கலையை அரசியலோடு பிணைத்து ஒன்றுபடுத்தி வாழுமாறு செய்தல் அக்கால அரசியலில் இல்லை. நாட்டை ஆண்ட அரசர்களும் கலையைத் தனித்துத் துய்த்து இன்புற்றனரேயொழிய, இக் காலம் போலப் பொதுக் கலைமன்றங்கள் அமைத்து யாவரும் களிக்குமாறு செய்தலை அக்காலத்தவர் அவ்வளவாக அறியவில்லை. ஆகையால், கலைஞர் குடும்பங்கள் அரசர், செல்வர் அணைப்பிலே வாழ நேர்ந்தன அரசர், செல்வர் ஆகிய இவர்களிலும்;

> **"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
> **ஊதிய மில்லை உயிர்க்கு."**

என்ற உயர்ந்த கோட்பாட்டை ஒரு சிலரே உடையவராக விளங்கினுர்கள். மற்றவர்கள்,

''சுவைக் கினிதாய குய்யுடை அடிசில்
பிறர்க்கீ வின்றித் தன்வயி றருத்தி
உரைசால் ஓங்குபுகழ் ஒரீஇய
முரைசுகெழு செல்வராக'' விளங்கினார்கள்.

ஆதலின், கலைஞர்கள் தம் கலையை உணர்ந்து உவந்து போற்றுவார் யாரோ அவரையே நாடிச் சென்று அவர்கள் கொடுக்கும் பொருட் கொடையின் மூலம் குடும்பங்களைப் பேணி வந்தார்கள். தனிப்பட்ட ஒரு சிலர் பல குடும்பங்களை எத்துணைக் காலம் போற்ற முடியும். போற்றுவாரின்றிக் கலைஞர்கள் பல நாள் வறுமையில் வாடினர்.

அவர்களது வறுமையோ மிகக் கொடியது. என்னுயிர் போகவில்லையே யென்று வாழ்நாள்மேல் வெறுப்புற்றுக் கூறும் சொல்லோடு, கோலே காலாக முன்றிலில் முதியதாய் வருந்திக் கிடந்தாள். புலவர்களது துணைவியர்களோ அழுக்கேறிய கந்தலை உடுத்தி உணவின்றி அறக்கடவுளைப் பழித்த வண்ண மாய் வருந்தினார்கள். சோறு கிடைக்கப் பெறாததினால் குப்பைக் கீரையைக் கொய்தாவது சமைக்கலா மென்றால் அதற்கும் வழியில்லை. ஏற்கனவே குப்பைக் கீரையைக் கொய்து கொய்து அதனிடத்திலும் இலை இல்லையாயிற்று. புதிதாக விடும் இளந்தளிரை விடாது கொண்டுவந்து உப்பின்றி உலையிலேற்றி உண்ணும் வாழ்வே அவ் வீட்டில் இருந்தது. கலைச்செல்வத்தை நல்கும் புலவர் வயிறோ சோற்றுப் பருக்கைப் புகுதலறி யாது வாடியது. அவர்தம் துணைவியர்களும் உண்ணு தலின்றி வாடினார்கள். அவர்களுடைய உடலோ பசி தின்னத் தின்னத் தோல் திரைந்து மெலிந்து விட்டது.

இன்னும் சில கலைஞர் இல்லிலோ அடுப்பு மூட்டிப் பல நாளாயின. அடுப்பிலோ காளான் பூத்துவிட்டது. குழந்தைகளோ பாலுக்காகச் சுவைத்து சுவைத்துப் பார்த்தனர். பால் வரும் வழியோ ஏற்கனவே தூர்ந்து விட்டதால் பாலில்லாது அப் பச்சிளங் குழந்தைகள் கண்ணீர் வடித்தனர். அழுகின்ற குழந்தையைப் பார்த்து தாயும் கண்ணீர் வடித்தாள். உணவு உண்ணும் நிலையிலுள்ள சிறுர்களோ உண்கலத்தை எடுத்து வந்து அம்மா சோறு, அம்மா சோறு என்று அழுதனர் அந்த அழுகையைப் போக்கத் தாய் "புலி புலி" என்று அச்சுறுத்தினுள். அதனுலும் அவர்கள் அழுகை நிற்க வில்லை. வானவெளியில் திரியும் நிலாவைக் காட்டி "அதோ நிலா பார்" என மகிழ்வூட்டியும் அழுகையை நிறுத்த முடியாது தாய் கலங்கினுள். வேறு வழி இன்றி "உன் அப்பா முகம் எப்படிக் காட்டு" என்று நினைவை மாற்றமுயன்றும் முடியாது அல்லல் உழந்தாள். இவ்வாறு பலநாள் கழிந்தன. இந்நிலையில் வறுமைப் புலவர்களைத் துரத்தாமல் வாளா இருக்குமோ? பெருந்தகைப் புலவர்கள் வள்ளல்களை நாடிச் செல்ல நேர்ந்தது.

இப்படிப்பட்ட வறுமை நிலையில் வாடியவர் பெருஞ்சித்திரனுர். பெரும் பரிசில் வேண்டி குமணன் பால் சென்றுர். குமணனிடத்து அவர் வேண்டிய பரிசில் அன்பில்லாது ஈயும் பரிசிலன்று. ஆதலின் புலவர் குமணனைப் பார்த்து "குமண! உன்னிடம் பரிசில் வேண்டி வந்தேன். அன்பின்றி அளிக்கும் பெருங் களிறுயினும் வேண்டேன். நீ அன்போடு சிறு குன்றி மணியைக் கொடுப்பினும் அதுவே யான் பெற்ற பெரும் பரிசில் என்று வாழ்த்திச் செல்வேனென்றுர்-"

**" உயர்ந்தேந்து மருப்பின் கொல்களிறு பெறினும்
தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலென் உவந்துநீ
இன்புற விடுதி ஆயின் சிறிது
குன்றியுங் கொள்வல் கூர்வேல் குமண "**

(புறம். 159)

இத்தகைய புலவர்கள் வறுமையுற்ற காலத்தும் தம் பெருமையினின்று இழியாது வாழ்ந்தார்கள். கொடுப்பவரின் பண்பை நோக்காது அவர் கொடுத்த பொருளைக்கொண்டு செல்வோரும் அக்காலத்தில் இருந்தனர் போலும். அவ்வாறு பெற்ற பரிசிலை வாணிகப் பரிசில் என்றனர். இத்தகைய வாணிகப் பரிசிலைப் பெருஞ் சித்திரனாரும் பெறுவாரென்று அதியமான் நெடுமானஞ்சி எண்ணினான் போலும். பெருஞ்சித்திரனார் பரிசில் வேண்டி அதியமான் நெடுமானஞ்சியிடம் சென்றார். அதியமான் அவர்க்குக் காட்சிக் கொடுத்தலின்றி அலுவலாளர் ஒருவரிடம் பொருளைக் கொடுத்துப் பெற்றுச் செல்லும்படி கூறினான். பெருந்தகைப் புலவர் " இப்பரிசிலை விரும்புவாரோ ? விரும்பாதவரானார். இப்பரிசிலை விரும்புவர் யார் ? ஓர் ஊதியங் கருதிப் பெறும் பரிசிலர்களல்லவா இப்பரிசிலை விரும்புவர்.

ஊதியங் கருதிவரும் பரிசிலன் யானல்லேன். இத்தகைய பரிசிலைப் பெறுவதற்காகவா குன்றையும் மலையையும் கடந்து வந்தேன். அதியமானிடம் சென்றால் அன்போடு எம் பண்பறிந்து ஈவான் என்றல்லவோ இவ்விடம் வந்தேன். ஆனால் இங்கு யான் பெற்ற பரிசில் என்னை ? காணாது ஈயும் வாணிகப்

பரிசில். காணாது ஈத்த இப் பொருட்கு யானோர் வாணிகப் பரிசிலன் அல்லேன். எம் பண்பறிந்து ஈயும் பரிசில் தினையனைத்தாயினும் இனிதாக ஏற்போம்" என்று இகழ்ந்து கூறினர்.

"குன்று மலையும் பலபின் னொழிய
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென
நின்ற வென்னயந் தருளி யீதுகொண்(டு)
ஈங்கனஞ் செல்க தானென வென்னை
யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்
காணா தீத்த இப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசில னல்லேன் பேணித்
தினையனைத் தாயினு மினிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே."

(புறம். 208.)

இதனை நோக்குகின்றகாலத்து வறுமைப் புலவரைத் துரத்தினும் பெட்பின்று ஈயும் பரிசிலைப் புலவர்கள் ஏற்க மறுத்தனர். இத்தகைய பெட்பின்றி ஈயும் பரிசிலைப் புலவர்கள் ஏற்க மறுத்ததுமன்றி, பெருமை இல்லாத அரசர்களைப் பாடிப் பரிசில் பெற்றவர்களுமல்லர்.

இன்று நாம் உலகியலில் காண்பது என்ன? இலர் பலராகிய காரணத்தால் பொருள் பெறுதல் வேண்டிப் பண்பில்லாதாரைப் பண்புடையரென்று பாராட்டுகின்றனர் பலர். கொடுக்கிலானைக் கொடுக்கும் கொடை வள்ளலென்பர். அறிவிலிகளை ஆன்றோர் என்பர்.

பொலிவில்லாதாரைப் பொலிவுடையரென்பர். இவ்வாறு பெட்பின்றி வாழ்வோரை வாழ்தல் காரணமாக இன்மை கூறிக்கிளத்தலே இன்று மிகுதியாக உள்ளது. பண்டு வாழ்ந்த புலவர்களோ பருக்கையற்றுப் பலநாள் பட்டினிக்கிடந்தபொழுதும் பண்பின்றி வாழ்வோரிடத்தில் சென்று பாடிப் பரிசிலைப் பெற்றவர்களல்லர்.

கண்டீரக்கோ பெருநள்ளியிடம் வன்பரணர் பரிசில் வேண்டிச் சென்றார். வன்பரணர், அவனது இயல்பான பெருமைகளை எடுத்துக் கூறி வாழ்த்தினார். அதற்கு அரசன் அப் பெருமைகளெல்லாம் என்னிடத்தில் உளவோ? என்று ஐயங்கொண்டவன் போல் புலவரைக் கேட்டுவிட்டான். அதற்குப் புலவர் அரசே! "வாழ்தல் வேண்டிப் பொய்கூறேன் மெய் கூறுவல். பிறர்க்கீயும் பெருமை இல்லாத அரசரைப் புகழும் பெற்றி எம்மனோர்க்கில்லை. அவ்வரசர்கள் செய்யாததைச் செய்தாரென்று செப்பும் தன்மையை அறியாததாயிற்று இச் சிறு செந்நா. ஆதலின், அரசே! தங்களது அகத்தில் புலவர்களைப் பற்றி ஏதாவது சிறு அய்யம் இருப்பினும் இன்றே அகற்றுங்கள். புலவர் நா "பொய்யாச் செந்நா" என்பதை என்றும் மறவாதீர்கள் என்றார்:—

"பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
செய்யா கூறிக் கிளத்தல்
எய்யா தாகின்றெஞ் சிறு செந் நாவே."

(புறம். 148)

இத்தகைய புலவர்கள் பொய்பேசி வாழ்தல் செய்யாது மெய் கூறி அவ்வாறே வாழ்ந்தும் வந்தனர். செல்

வத்துப் பயனே ஈதல் எனப் பிறர்க்கு அறிவுறுத்திய புலவர்கள் தாங்களும் அவ்வாறே விளங்கினார்கள். செல்வரிடத்துச் செல்வம் பெற்ற காலை சேர்த்து வைப்போமே யென்ற குறுகிய உணர்வு அவர்கள் பாலில்லை. "யாதுமூரே யாவருங் கேளிர்" என்ற பரந்து பட்ட உண்மை உணர்வே அவர்கள் பால் இருந்துவந்தது.

"செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே"

(புறம். 189)

என்று பிறர்க்கு அறிவுறுத்திய நக்கீரனார் போன்றவர் வழியிலே வந்தவர் பெருஞ்சித்திரனார். பெற்ற தாயும் மனைவியும், பிள்ளையும் பசிப் பிணியால் வாட, தாம் குமணன்பால் பெற்று வந்த பொருளைப் பேழையில் வைத்துப் பூட்டென்று தம் துணைவியார்க்கு அவர் கூறவில்லை. பலநாள் வைத்துக்கொண்டு பெருமையாக வாழ்க என்று கூறினாரோ? அல்லர். அன்றி, தன்னைக் கேட்டுத்தான் பிறர்க்குக் கொடுக்க வேண்டுமென்று கூறினாரோ? அதுவுமின்று; "உன்னை விரும்பியோர்க் கெல்லாம் கொடு. நீ விரும்புவோர்க்கும் கொடு. உன் உற்றார் உறவினர்க் கெல்லாம் கொடு. நமது பசிதீரப் பலநாள் பொருள் கொடுத்தோர்க்கும் கொடு. இன்னார் இனியாரென்று வேறுபாடு கருதாது கொடு. என்னைக் கேளாமல் கொடு. யானும் கொடுப்பேன். நீயும் கொடுப்பாயாக திறம்பட வாழ்தலைப் பற்றி எண்ணாதே. இது வள்ளல் குமணன் நல்கிய வளம்:—

**"நின்னயந் துறைநர்க்கு நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பின்நின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க்(கு) என்னாது என்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேல் குமணன் நல்கிய வளனே."**

(புறம். 163)

இத்தகைய புலவர்க்கு எவ்வளவு செல்வம் நல்கினும் இவர்களது வருமை தொலையுமோ? செல்வந்தான் அவர்களிடத்தில் நிலைபெறுமோ? இத்தகைய பண்பினை அவர்கள் பெற்றதனாலே தான் அவர்கள் வறுமைநிலை உற்றனர்.

விரும்பா ஈகை

**"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்."**

என்பது வள்ளுவர் வாக்கு. இவ்வாறு வள்ளுவர் வெகுண்டு கூறுவதற்குக் காரணமென்ன? அவர் காலத்தில் பொருளைச் சேமித்து வைத்தலே குறிக்கோளாக ஒரு சிலர் வாழ்ந்திருப்பர். பிறர்க்கீதலுமின்றித் தானும் உண்பதுமின்றிப் பொருளைப் பேணிவைத்தலே தமது கடமையெனக் கொண்டு வாழ்ந்திருப்பர். அதனால்தான் "வைத்திழக்கும் வன் கணவர்" என்று கூறுகின்றார். இவ்வாறு

வன்கண் படைத்தவரும் சங்க காலத்தில் வாழ்ந்தனர். பரிசில் வேண்டி வந்தவர்க்குத் தன் தலையையும் கொண்டுசெல்க என்று கூறிய குமணன் போன்றோர் வாழ்ந்தபோது தான் அவர்களும் வாழ்ந்தனர். இவர்களே வறியவர்கள். "உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா மடமை" என்பது வள்ளுவர் வாய்மொழி. இத்தகைய வறியவர்களும் அக்காலத்தில் வாழ்ந்தனர்.

பெருஞ் செல்வராக இருந்தும் பொருள் பற்றின் காரணமாகச் சிறிது கொடுக்கும் சிறுமையும். கடும் பசியோடு சென்றோர்க்குக் காலம் தாழ்த்திக் கொடுக்கும் கல்மனமும் உடையவராக அக்காலத்தில் சிலர் விளங்கினர். அத்தகையோரது செல்வத்தைப் புலவர்கள் மதித்தல் செய்யாது நீங்கினர், "இல்லென மறுக்கும் சிறுமையோர்" என்று இவர்களைப் புலவர்கள் இகழ்ந்தனர்.

இளவெளிமானிடம் பரிசில் வேண்டிச் சென்றார் பெருஞ்சித்திரனார். பெருஞ்சித்திரனாரை இவன் நன்கறிந்தும் அவரைக் காணாததுபோல் கண்டான். இவர்கள் ஏன் இங்கு வந்துற்றனரென்று அகத்தில் அன்பின்றி முகம் மாறுபட்டான். இல்லையென்று சொல்வதற்கஞ்சி சிறிது கொடுக்க முன்வந்தான். இவனது முகமாறுபாட்டையும் இவறல் தன்மையையும்கண்ட சித்திரனார் அரசனை நோக்கி அரசே! "பரிசில் நல்குவதற்கு நீ ஒருவனே உளனென்று எண்ணாதே. யாங்கள் முயன்று செல்லின் பெரும் பரிசிலையும் பெறுவோம். முயற்சியின்றி நினது பொருளே பெரிதென்று கருதுவோர் நீ கொடுப்

பதை விரும்பி ஏற்பர். 'எங்களது வரவே நல்வரவு' என்று எதிர்நோக்கும் பண்புடையார்க்கு இவ்வுலகம் பெரிது. அவரை விரும்புவோரும் பலர். பிறர் கண்டு இரங்கத்தக்க நிலையிலுள்ள எங்களைக் கண்டும் நீயோ இரங்காதவனாக உள்ளாய். உன்னிடத்தில் பரிசில் கொடுவென்று கேட்பது பழம் பெறவேண்டி பழுக்காத காயினை வலிய பழுக்கவைக்கும் தன்மையினை ஒத்தது'' என்று அரசனுக்கு இடித்துரைத்துப் பொருள் கொள்ளாது சென்றார் :—

எழுவினி நெஞ்சஞ் செல்கம் யாரோ
பருகு வன்ன வேட்கை யில்வழி
அருகிற் கண்டும் அறியார் போல
அகனக வாரா முகனழி பரிசில்
தாளி லாளர் வேளார் அல்லர்
வருகென வேண்டும் வரிசை யோர்க்கே
பெரிதே உலகம் பேணுநர் பலரே
மீளி முன்பின் ஆளி போல
உள்ளம் உள்ளவிந் தடங்காது வெள்ளென
நோவா தோன்வயிற் றிரங்கி
வாயா வன்கனிக் குலமரு வோரே.

(புறம். 207)

இதுவே புலவர்களது பண்பாகும். புலவர்களது உள்ளம் கலைத்தன்மை வாய்ந்தது. கலை, கலையைத் தானே நாடும். அதுபோன்று கலைஞர்கள் கலையுள்ளம் படைத்தவர்கள் யாரோ? அவர்களையே நாடிச் சென்றனர். அவர்கள் நல்கும் பரிசிலையே விரும்பி ஏற்றனர். நிறைந்த செல்வமுடைய

மூவேந்தராயினும், அன்பின்றி ஈயும் பரிசிலை அவர்கள் வாங்க மறுத்தனர். இதனை,

> **"முற்றிய திருவின் மூவர் ஆயினும்**
> **பெட்பின்(று) ஈதல் யாம்வேண் டலமே"**

(புறம். 205)

என்று கடியநெடு வேட்டுவனிடம் பெருந்தலைச் சாத்தனார் கூறியதை அறியலாம்.

மாடலன் மதுரைக்குமரனார் பரிசில்வேண்டி பெருந்திருமாவளவனிடம் சென்றார். திருமாவளவன் புலவர்க்குப் பரிசில் கொடுக்கச் சிறிது காலம் நீட்டித்தான். அதனைக்கண்டு பொறுதவராகிய குமரனார், பெரும! "நின்பால் வந்தடைந்தது நினது பெருஞ் செல்வம் கருதியல்ல; நினது செல்வத்தைவிடப் பதின்மடங்கு செல்வம் பெற்றோர் இந்நாட்டில் இல்லையோ? தேரும், மாவும், களிறும் சிறக்கப்பெற்று விளங்கும் செல்வம் உடையோரிடத்திலும், செருமேம் படூஉம் வென்றியை உடைய வேந்தரிடத்திலும் நாங்கள் செல்லாததற்குக் காரணமென்ன? எங்கள்பால் பாடறிந்து ஒழுகும் பண்பு அவர்கள்பா லில்லையாதலால் அவர்களது வெண்குடைச் செல்வம் வியத்தலோ இலம். முஞ்ஞைக் கீரையொடு வரகு சோற்றைக் கலந்துண்ணும் சீறூர் மன்னராயினும், எம் வயிற்பாடறிந்து ஒழுகும் பண்பு உண்டாயின் எம்மால் அவன் உள்ளுதலை உடையவனாவன். அத்தகைய பண்பு நின்பால் அமையப் பெற்றிருத்தலின் நின்னை வந்தடைந்தேன். எங்களுக்கு எவ்வகை மேம்பட்ட துன்பம் வறினும் அறிவில்லாரது செல்வத்தை நினையேம். இவரினும்

அறிவுடையோரது வறுமை பயன்படுமாதலின் யாம் அவரையே உவந்து மிகப் பெரிதும் நினைப்போம்'' என்றார்.

''மண்கெழு தானை ஒண்பூண் வேந்தர்
வெண்குடைச் செல்வம் வியத்தலோ இலமே
எம்மால் வியக்கப் படூஉ மோரே
இடுமுட் படப்பை மறிமேய்ந் தொழிந்த
குறுநறு முஞ்ஞைக் கொழுங்கட் குற்றடகு
புன்புல வரகின் சொன்றியொடு பெறூஉம்
சீறூர் மன்ன ராயினும் எம்வயிற்
பாடறிந் தொழுகும் பண்பி னோரே
மிகப்பே ரெவ்வம் உறினும் எனைத்தும்
உணர்ச்சி யில்லோர் உடைமை உள்ளேம்
நல்லறி(வு) உடையோர் நல்குர(வு)
உள்ளுதும் பெருமயாம் உவந்துநனி பெரிதே.

(புறம். 197)

தெய்வப் புலவர் திருவள்ளுவரும்,

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு.''

என்று கூறியுள்ளார்.

இத்தகைய பண்பு வாய்ந்த தமிழ்ப் புலவர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நம் தமிழகத்தில் வாழ்ந்தார்கள். ''பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்'' என்பது அவர்களிடத்தில் அறியாக் கூற்றாயிற்று. ''பசி அலைத்தல்காலையும் பண்பிலாதாரைப் பாடன்மார் எமரே'' என்ற பண்பும், ''அவர்கள் ஈயும் பரிசில் யாம் வேண்டிலமே'' என்று மறுக்கும் மாண்பும் உடையவர்களாகப் புலவர்கள் அக்காலத்தில் விளங்கினர்கள்.

வழங்கிய வள்ளல்கள்

வறிஞர்க்கு வரையாது பொருள் வழங்கியோர் யாரோ, அவர்க்கே வள்ளல்கள் என்று பெயராகும். அக்காலத்தில் அரசர் செல்வர் ஆகியோர் வள்ளல்களாய்த் திகழ்ந்தனர். கடைச் சங்கக் காலத்தில் விளங்கிய வள்ளல்களில், எழுவர் சிறந்து விளங்கினர். இவர்களைக் கடையேழுவள்ளல்களென மக்கள் பாராட்டுவர். இவர்களைப்பற்றிச் சங்க நூல்கள் விவரித்துக் கூறுகின்றன. அதியமான், ஆய், ஓரி, காரி, பாரி, நள்ளி, பேகன் ஆகியோர் கடையேழு வள்ளல்களாவர்.

இவர்கள் காலத்தில் கலைஞர்கள் பசிப்பிணியின்றி இனிது வாழ்ந்தனர். வள்ளல்களும் கலை ஆர்வமிக்கவராக விளங்கினர். கலையைப் போற்றிப் புகழ்ந்தனர். கடும் பசியென்று கலைஞர்கள் வருவாராயின் களிறோடு களஞ்சியத்தையும் திறந்துவிட்டு, கொண்டு செல்கவென்று கூறினர். புலவர்கள் தங்களைப் புகழ்ந்து பாடுதல் பெருமையென்று கருதினர். வள்ளல்கள் புலவர்களால் "பசிப்பிணி மருத்துவன்", "பாண்பசிப் பகைஞன்" எனப் பாராட்டப் பெற்றனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த மக்களது பண்பு இது வென்பது இளம்பெருவழுதியின் பாட்டால் அறியலாம். "இந்திரர் பெறும் அமிழ்தம் தமது தவ வலிமையால் பெறினும், இனிதென விரும்பி தனித்துண்பதை அறியார். புகழெனின் உயிரையும் கொடுப்பர். பழியெனின் உலகொடுவரினும் கொள்ளலர். தமக்கென முயலாது பிறர்க்கென முயலுநர் உண்மையான் இவ்வுலகம் உள்ளது" எனப் பாடுவது

காண்க. இத்தகைய பண்பினைப் பெற்று விளங்கியவர்கள் தமிழர். ஆதலின் வரையாது கொடுக்கும் வள்ளல் தன்மை உடையவர்களாகத் தமிழர்கள் விளங்கினர். இரப்பவர்க்கு ஒன்று ஈயாதிருப்பின் அதுவே தனக்கு வரும் பெரும் பழியாகவும் அவர்கள் கருதினர்கள். இவர்கள் வறிஞர்களுக்குப் பொருள் ஈயும் காலத்து, வறிஞர்களின் வறுமை நீங்குமாறு பொருள்களை வாரி வழங்கினர். இதற்குச் சான்றாக வல்வில் ஓரியைக் கூறலாம். வல்வில் ஓரி என்பவன் வள்ளல் தன்மை மிக்கவன். தன்னை நாடி வரும் இரவலர்க்கு அணிகலன் அணிந்த யானையை அளிப்பவன். இவனது மாரி போன்ற ஈகையைக் காண்டற்கு ஒரு நாள் சென்றது கூத்தச் சுற்றம். அச்சுற்றத்தினரைக் கண்ட வல்விலோரி அவர்களுக்கு அணிகலன்களை நல்கினன். வெள்ளி நாரால் தொடுக்கப்பட்ட மணிமிடைந்த குவளைப்பூ மாலையை மார்பில் சூட்டினன். யானையினத்தையும் அளித்தனன். இத்தகைய பொருள்களைப் பெற்ற பாணர் சுற்றத்தினர் தம் பசி நீங்கப் பெற்றனர். ஆதலின் அவர்கள் தம் தொழிலாகிய இனிய இயங்கள் ஒலிப்பப் பாடுதலையும் மறந்து ஆடுதலும் மாட்டாராயினர். (புறம். 153)

இவ்வாறு வாரிக் கொடுக்கும் வண்மையான் வானுலகம் கிட்டுமென்று வள்ளல்கள் எண்ணினரல்லர். இப்பிறப்பின்கண் செய்வோமாயின் மறுமைக்கு ஆம் என்று எண்ணி, அறத்தை வாணிகமாகக் கருதி வள்ளல்கள் வழங்கினரல்லர். சான்றோர்கள் சென்ற நெறியிலே அவர்களது கைவண்மை அமைந்து விளங்கிற்று. வள்ளல் ஆயின் வண்மை இத்தகையதாகும்:—

**"இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆயலன் பிறரும்
சான்ஞேர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன் றவன்கைவண் மையே."**

(புறம் 134)

வறுமையோர் அல்லாது செல்வம் தழைத்தோர்க்குச் செல்வம் நல்கல் பயன் கருதிக் கொடுத்தலாகும். வள்ளுவப் பெருந்தகையாரும்,

**"வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து."**

என்று கூறியுள்ளார். ஆதலால் வள்ளல்கள் வறுமையைக் கடிதலன்றி, அறத்தை வாணிகமாகக் கருதி வழங்குவோரல்லர். புலவர்கள் வள்ளல்களிடத்து இரக்குங்காலத்து இக்கருத்தையே கூறியுள்ளனர். என்போன்ஞேர்க்கு ஈதலே ஈகை. அன்றி, பிறர்க்கீவோர் பயன் கருதித் தமக்கீவோராவர்:—

**"எமக்கீவோர் பிறர்க்கீவோர்
பிறர்க்கீவோர் தமக்கீபவென
அனைத்துரைத்தனன்** ... ... *(புறம். 136)*

தம்மை நோக்கி இரந்து வந்தோர்க்கு ஈதல் செய்ய இயலாதாயின் வறிதே வறிஞர்களை வள்ளல்கள் அனுப்பினரல்லர். வள்ளல் குமணன் நாடிழந்து காயும் கனியும் தின்று காட்டில் வாழ்ந்தான். புகழ் புகாததோர் இடமுண்டோ? பெரும் அளவில் பொருள் கொடுத்துப் புகழ் பெற்ற குமணன், புலியும், கரடியும் வாழும் பொல்லாக் காட்டிடத்தே வாழ்கின்ற காலத்தும் வறி

ஞர்கள் அவனைத் தேடிச் சென்றனர். பெருந்தலைச் சாத்தனார் அக்காட்டிடத்தே சென்று இரக்கின்ற காலத்து, ஈதற்குப் பொருள் இல்லையே யென்று குமணன் வருந்தினாலும் வறிதே புலவரை அனுப்பினான் அல்லன். வாளைப் புலவர் கையில் கொடுத்துப் புலவரே! என் தலையைக் கொய்து செல்லுங்கள் என் தம்பி இத்தலையினைக் கண்டு தக்க பரிசில் அளிப்பானென்று பரிந்துரைத்து நின்றார். இது வள்ளல் குமணன் வண்மை நிலையைக் காட்டும் பெருஞ் செயலாகும்.

பரிசில் வேண்டி வருவோர்க்குப் பரிசில் அளிக்க இயலாதிருப்பின், பகைப்புலம் நோக்கிப் படையெடுத்துச்செல்ல முற்பட்டனர் பழங்கால வள்ளல்கள். பாண்பசிப் பகைஞனாகிய தோயன் மாறனே இதற்குச் சான்றுவான்.

தோயன் மாறன் பெருஞ் செல்வனுமல்லன்; வறிஞனுமல்லன்; வந்த வறிஞர்க்கு இல்லையென்று கூறாது வழங்கும் கொடை மனம் உடையவன். பாணர்களின் பசிப் பிணியைப் போக்கியதால் "பாண்பசிப் பகைஞன்" என்று பாணர்களால் பாராட்டப் பெற்றவன்.

மதுரைக் குமரனார் என்னும் புலவர் பரிசில் வேண்டி இவனிடத்தில் சென்றார். புலவரின் ஒட்டிய வயிற்றினைக் கண்ட தோயன்மாறன் உளம் வருந்தினான். உலகோர்க்கு அறிவுரை கூறி உய்யுமாறு செய்யும் உத்தமர் உணவின்றி வாடுவதா! அந்த வாட்டத்தைக் கண்டு நான் இன்னும் உயிர் வாழ்கின்றேனே! எடுத்துச் செல்வேன் வேலினை; பொருளுள்ளவரிடத்தில் சென்று பொருவேன்; புலவர் பசியினைப் போக்குவேன் என்று எழுந்தான். கொல்லனது உலைக்களத்திற்குச்

சென்றான். கொல்லனைக் கண்டு ஐய! உன்னிடம் ஒன்று இரக்க வந்தேன்; இதோ புலவர் வயிறு வாடுகின்றது; ஆதலின் வேல் வடித்துக் கொடுக்க'' என வேண்டினான்:—

''நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே
இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே
... ...
... ... கொடை எதிர்ந்து
ஈர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞன்.
யாம்தன் இரக்குங் காலைத் தான்எம்
உண்ணா மருங்குல் காட்டித் தன்னூர்க்
கருங்கைக் கொல்லனை இரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசின் எனவே''

(புறம். 180)

இவ்வாறு வறிஞர்களின் வயிற்றுக் கவலையைப் போக்க வேல்தேடுங் காட்சி, ஈராயிரம் ஆண்டுகட்கு முன் தமிழகங் கண்ட காட்சியாகும். இவ்வுணர்வுதான் இன்று நம்மிடையே வாழ்ந்த பாரதியார் உள்ளத்திலே புத்துணர்வு கொண்டு ''தனி ஒருவனுக்குணவில்லையெனில் சகத்தினை அழித்திடுவோம்'' என்று கூறலாயிற்று.

இவ்வாறு வயிற்றுத் தீத் தணிய வழங்கிய வள்ளல்கள் வாழ்ந்த காலத்திலேதான் சில செல்வர்கள் பசியைக் கண்டும் பாராமுகமாக இருந்தார்கள். பரிசிலர்கள் அவர்களின் பாராமுகத்தைக் கண்டு வாளா இருக்கவில்லை. பரிசில் கொடுக்கக் காலம் தாழ்த்தியவர்

களைக் கண்டு கல் நெஞ்சும் கரையும்படி அறிவுரை கூறினர்.

நன்மாறன் செல்வமுடையவனாயிருப்பினும் பரிசில் வேண்டிச் சென்ற ஆலூர் மூலங்கிழார்க்குப் பொருள் கொடுக்கக் காலம் தாழ்த்தினான். அது கண்டு பொறாத புலவர், "செல்வ! முடியக்கூடிய தொன்றினை முடியாதென்று கூறுதல், இரப்போர்களை வருத்துவதாகும். அன்றியும் புரப்போரின் புகழையும் குறைப்படுத்தும். ஆதலின் என்பால் நீ செய்ததும் இத்தன்மைத்தே. இத்தகையோர் செயலை என்றும் எங்குடியிலுள்ளோர் காண்பதை அறியார். ஆனால் நின்னிடத்தில் யான் கண்டேன்" என்றார். (புறம். 196)

இதுபோன்று, செல்வர் வறிஞர்க்குப் பொருள் வழங்காக் காலத்து வரும் இழிவினைப் புலவர்கள் எடுத்துக்கூறி, இத்தகைய செயல்களை மீண்டும் செய்யாதவாறு தடுத்தனர்.

வள்ளல்கள் பொருள் வழங்கிப் புகழைத் தேடினர். புகழின் வடிவு என்று வாழ்த்தினைப் பெற்றனர். வறுமையின் பகைவராய் விளங்கினர். பசிப்பிணி நாட்டைப் பாழ் செய்யாதவாறு பண் படுத்தினர். பாணர்களின் பாட்டிசையில் மெய்மறந்து உண்மை இன்பம் கண்டனர். வரையாது பொருள்களை வாரி வழங்கினர்; ஆதலின் நாடு வாழ்ந்தது. வாழ்க வள்ளல்கள்! வளர்க ஈதல்!

3 அருள்

அருள் மனம்

" அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல். "

என்று நமது வள்ளுவப் பெருந்தகையார் கூறுகின்றார். இக்கருத்தினைப் பல ஆண்டுகட்கு முன் நம் தமிழர்கள் உணர்ந்து அதன்வழி நடந்தனர். அவர்கள் பெருஞ் செல்வம் பெற்றிருந்தும், அதனைச் செல்வமாகக் கொண்டவரல்லர். அச் செல்வம் இழிந்தோரிடத்தி லும் உளதாதலால் அவர்க்கும் இவர்க்கும் உள்ள வேற்றுமைகள் யாவை ? ஆதலின் அதனைச் செல்வ மென்று கொள்ளாது அருளே செல்வமென்று கொண்டனர் :—

" அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்;
பொருட் செல்வம்
பூரியார் கண்ணும் உள. "

அருளைச் செல்வமென்று கொண்ட ஆன்றோர் அருள் மனம் பெற்றவராக விளங்கினர். அவர்கள் தமது செல்வம் முழுமையும் உயிர்களை ஓம்பும் வழியில் செல வழித்தனர். உயிர்களுக்கு உதவி வேண்டும்போதெல் லாம் தம் உயிரையும் கொடுக்க முன் வந்தனர். ஆதலின் அவர்கள் தம்முயிரைப்பற்றி அஞ்ச வேண்டா தவராயினர் :—

" மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை: "

இவ்வாறு உயிர்களைப் போற்றி ஒழுகிய அருள் மனம் பெற்றோர் சங்ககாலத்தில் பலர் வாழ்ந்தனர்.

அருளுள்ளம் பெற்று விளங்கியவர்களில் பாரி வள்ளலே முதல்வன். இரவலர்க்குத் தன்னையும், முல்லைக்கொடிக்குத் தேரையும், ஈந்த அருள் மனம் பெற்றவன் பாரி. பாரி இரவலர்பால் காட்டிய அன்பை இத்தகைத்தென்று அளவிடின் அது அளவில் அடங்காது. ஆடியும், பாடியும் வரும் பரிசிலர்க்குத் தன் நாடு ஊர் அனைத்தும் கொடுத்ததோடன்றித் தன்னையும் தன் உயிர் நண்பர் கபிலரையும் கொடுக்கக் காத்திருந்தான் பாரிவள்ளல். இத்தகைய கொடைச் சிறப்பினையுடைய வள்ளல் பெருமான் பூத்துக்குலுங்கும் பூங்காவினை ஒருநாள் காணச் சென்றான். அங்குள்ள நறுமணப் பூக்களும், நறுந்தளிர்களும் இவனது வருகையை வரவேற்பனபோல் அசைந்தாடின. அவற்றின் அசைவும் நெளிவும் கண்டு அன்புகொண்டு அந்நறுந்தளிர்களைத் தடவிக் கொடுத்த வண்ணமாய்த் தேரில் சென்று கொண்டிருந்தான்.

ஒரு முல்லைக்கொடி கொழுகொம்பின்றிக் காற்றினால் அலைக்கப்பட்டு அலைந்து கொண்டிருந்தது. அதனைக் கண்டான் பாரி. மிகவும் இரக்கங்கொண்டான். உடனே தன் தேரை விட்டுக் கீழே இறங்கினான். தேரை அருகிலே நிறுத்தி, அக் கொடியினை எடுத்துத் தேரின்மேல் படரும்படி விட்டான். பின்பு அக்கொடியைப் பார்த்து "இளிய காட்சியும் நறுமண மலரும் நல்கும் கொடியே ! இனி உனக்குக் காற்றினால் எவ்விதத் துன்பமும் நேராது. இன்பமாய் எழுந்து வளர்ந்து, ஓங்கி உயர்ந்து மிகச் செழிப்புடன் வாழ்வா

யாக" என்று அக்கொடியினை வாழ்த்திவிட்டுத் தன் பரிவாரங்கள் சூழத் தன் ஊர் நடந்து சென்றான். இது வல்லவா அருள்மனம்!

துன்பம் இத்தகைத்து என்று எடுத்துக் கூற இயலாத அம் முல்லைக்கொடியின்மேல் அருள் கூர்ந்து, அருங்கலம் அணிந்த தேரினை அளிக்கும் அன்புச் சிறப்பை என்னென்று கூறுவது! இத்தகைய அருள் மனத்தைக் கண்ட புலவர்கள் பாரியை,

" ஊருடன் இரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீந்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமான்
நெடுமாப் பாரி ... ..." *(புறம். 201)*

என்று பாராட்டினர். சைவப் பெரியார் சுந்தர மூர்த்தி நாயனாரும் "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப்பாரிலை" என்று கூறு வதன் மூலம் இவனது கொடைப்பண்பும், அருள் மனமும் யாவர்க்கும் வெள்ளிடை மலைபோல் தெற் றென விளங்கும்.

இது போன்று அருள் மனம் பெற்று விளங்கிய வர்களில் பேகனும் ஒருவன். பேகன் இரவலர்கள் மீண்டும் வறுமையுறாதவாறு வேண்டும் பொருள்களை அள்ளிக்கொடுத்து, அவர்களை ஆதரித்தவனாவான். பேகன் ஒருநாள் காலையில் காட்டிடையே தேரில் செல் லும் காலத்து மயில் ஒன்று குளிரினால் நடுங்கக் கண் டான். அதன் நடுக்கத்தைக்கண்டு அவன் உள்ளமும் நடுங்கிற்று. உடனே தன்மேல் போர்த்தியிருந்த விலை யுயர்ந்த போர்வையினை அம்மயிலுக்குப் போர்த்தி

விட்டான். மயிலின் நடுக்கந் தீர்ந்ததைக் கண்ட பேகன் இன்பமுற்ற உள்ளத்தோடு தன் ஊர் நோக்கி இனிது சென்றான்.

விலையுயர்ந்த போர்வையென்றும் எண்ணாது மயிலுக்குப் போர்த்திய மனம் அருள் மனமல்லவா? அந்த அருள் மனத்தை,

" மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅ மீத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக....." **(புறம். 145)**

என்று புலவர்கள் பாராட்டினர்.

இவ்வாறு பகுத்தறிவற்ற உயிர்களுக்கும் தாம் வேறு, அவைவேறு என்று பாராட்டாது, அருளு கின்ற அருள்மனத்தை உடையவராக அக்காலத் தமிழர்கள் விளங்கினர்.

வள்ளல் அதியமான் மக்களின் நிலையாமையைக் கண்டு மனம் வருந்தினான். "இவ்வுலகத்தில் பிணி யும், இறப்புமின்றி நெடுநாள் வாழ்வதற்கு வழி யில்லையோ?" என்று வாடினான். தன்னை நாடி வரு கின்ற பெரியார்களை யெல்லாம் "நெடிது நாள் உலகில் வாழ வழியில்லையா?" என்று வினவினான். ஒவ்வொரு வரும் தத்தம் கருத்தை அறிவித்தனர். ஆயின் அவனது மனம் உவக்குமாறு ஒருவரும் விடை கூறினா ரில்லை.

ஒரு மூதறிஞர் அதியமானிடம் வந்தார். அதிய மான் அம்மூதறிஞரை வரவேற்று, இருக்கையில் அமரச்செய்து, தன் அவாவினை வெளியிட்டான். அதற்

கவர் உளம் மகிழ்ந்தவராய், "உலகில் நெடுநாள் வாழ வழியுண்டு; ஆனால் அரிதின் முயன்று அதனைப் பெற வேண்டும்; அது கைவரப்பெற்றால் நீ எண்ணியது கைகூடு மென்றார்."

"அஃது என்ன அறிஞரே? அதனைக் கூறுங்கள்; இன்றே அதனைப் பெற முயலுகிறேனென்றான்." அதற்கு முனிவர், "பெரும! நினது குதிரை மலைச் சாரலில் ஒரு பிளவு உள்ளது. அப்பிளவில் நெல்லி மரம் ஒன்றுளது, அம்மரத்தில் பல்லாண்டுகட்கு ஒரு முறை இரண்டொரு பழம் பழுக்கும். அப்பழத்தினைப் பெற்று எவரேனும் உண்பாராயின் அவர்கள் உலகில் நெடுநாள் எவ்விதப் பிணியும் இன்றி வாழ்வர். ஆனால் அம்மரத்தினை நெருங்குவது எளிதல்ல. அரிதின் முயன்று சென்றாலே அம்மரத்தினை அணுகமுடியும். ஆதலின் அதனைப் பெறமுயல்வாயாக" என்று கூறினார். அதியமானது உள்ளம் ஆனந்தக் கடலில் மூழ்கிற்று. அன்றே அப்பழத்தினைப் பெறக் குதிரை மலைக்குச் சென்றான்.

குதிரை மலையின் கண் அப்பிளவு எங்குளதென்று பலநாள் தேடி அலைந்தான். ஒரு நாள் அப்பிளவினைக் கண்டான். அப்பிளவில் இறங்குவோர் தவறிவீழின் பாதலும் புக் கொழிய வேண்டியதுதான். அப்பிளவி லுள்ள நெல்லி மரத்தினை நெருங்குவதற்கு வழியின்றி முட்புதர்கள் பல இருந்தன. அவற்றில் சிக்குண்டால் அவை உடலைச் சல்லடைக் கண்போலத் துளைத்துவிடும். இத்தகைய இடையூற்றைக்கண்டு உளம் அஞ்சினா னல்லன் அதியமான். அவனது பணியாட்களை அப் பிளவில் இறங்கச் செய்ய அவனது உள்ளம் இடம்

கொடுக்கவில்லை. தன்னுயிர் போல் பிற உயிரையும் கருதும் அருள்மன மாயிற்றே! ஆதலின் அவனே அப்பிளவில் இறங்கத் துணிந்தான். இவன் அறிவும் வலிமையும் உள்ளவனுதலால் அவ்விடையூற்றை வென்று, அக்கரு நெல்லிக்கனியைக் கொய்து வந்தான். அக் கரு நெல்லிக்கனியை முகத்தில் பல தடவை ஒத்திக் கொண்டான். அப்பழத்தைக் கையிலே ஏந்தி அரண் மனை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

வெளியூர் சென்றிருந்த ஔவையார் அதியமானைக் காணவந்தார். அதியமான் அரண்மனையில் இல்லை யென்பதை அறிந்தார். அலுவலாளர் "அரசர் விரை வில் வந்துவிடுவார் அமருங்கள்; தங்களுக்கு வேண்டும் பரிசிலை நாங்களே தருகிறோம்; அமருங்கள்; இளைப் பாருங்கள் ;" என்று கூறினர். ஔவையார் அதிய மான் இல்லாத இல்லத்தில் விருந்தினைப்பெற விரும்ப வில்லை. ஆனல் பல ஊர் சென்று நடந்துவந்த களைப்பும், அதியமான் இல்லாத துயரமும் அவரை வருத்தின. அன்றியும் பசியும் அவரை வருத்தலாயிற்று. ஆதலின் நடக்க வலிமை அற்றவராய், வாடிய முகத்தோடு அரண்மனைப் புறத்திலுள்ளதொரு கற்பீடத்தில் அமர்ந்தார்.

அச்சமயம் அதியமான் தன் அரண்மனையை அடைந்தான். ஔவைப்பிராட்டி வாடிய முகத் துடன் அமர்ந்திருப்பதைக் கண்டான். முதற்கண் அவர்மாட்டு பல இன்மொழி பகன்றுன். ஔவைப் பிராட்டி பசியினுல் களைத்திருப்பதை உணர்ந்தான். தான் அரிதின் முயன்று கொணர்ந்த அக்கரு நெல்லிக் கனியை ஔவையின் கரத்திற்கொடுத்து " அம்

மையே ! இக்கனியை உண்ணுவீராயின் நாவறட்சி நீங்கும் " என்று வேண்டினன். ஔவையாரும் பசிக்கொடுமையால் அவன் கூறியதும் உண்டார். அவர் களைப்பு நீங்கியபின், " வள்ளலே ! இக்கனி நனி மிக இனிப்பாயிருக்கின்றதே ! இக்கனிபோல் நான் வேறு எங்கும் கண்டிலேன்; இதனை எங்குப் பெற்றாய் ! இயம்புதி " என்று வினவினர். அதியமான் அக்கனி கிடைத்த வரலாற்றை விளக்கமாகக் கூறிய பிறகு " அம்மையே ! இக்கனியை உண்ணுவதற்கு நான் விரும்பினேன். ஆனல், நான் உண்பதால் இவ்வுலகுக்கு என்னபயன் ? தங்களைப் போன்ற அறிஞர்கள் பல நாள் வாழின் பலருக்கு அறிவுரை கூறி, உலகத்தைப் பண்படும் வகையில் செலுத்தலாம். அதனைக் கருதியே அக்கனியைத் தங்கட்கீய இசைந்தேன் " என்று கூறினன்.

ஔவையார் வியந்து " ஆ ! ஆ !! என்னே நினது அருங்குணம் ! உன்னைப் போன்று தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெருந்தகையாளரைக் காண்பது அரிதினும் அரிது ! பெரும ! மீண்டும் அக்கனியைப் பெறுவது அரிதாயிற்றே என்றும் கருதாது, அதன் பயனையும் எனக்கு முன்னர் எடுத்துக்கூறாது, உன்னுள் ளத்துள் அடக்கி என் சாதலைத் தவிர்க்க இக்கனியை எனக்கு ஈந்தாய். ஆதலின், பால்போன்ற வெண்பிறை யைத் தனது திருமுடியின் கண் அணிந்த நீலமணி மிடற்றவனாகிய சிவபெருமான் போன்று நீ நிலைபெறு வாயாக " என்று வாழ்த்தினர் :—

“ ஆர்கலி நறவின் அதியர் கோமான்
போரடு திருவின் பொலந்தார் அஞ்சி
பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும! நீயே; தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா
தாதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத் தனையே ” (புறம். 31)

ஔவையாரால் அருளப்பெற்ற அதியமான் அருளாளனாக விளங்கினான். அவனது அருள் மனம் ஔவையாரைச் சாதலினின்றும் தவிர்த்தது. ஆதலின் அருள் மனம் இன்னது செய்யும் தன்மைத்து என்று அளவிடற்கரியது.

புலவரின் புலமையைப் போற்றிய அரசர்கள், புலவரிடம் ஏதேனும் குற்றம் காணின் பொறுக்கும் அருள்மனம் உடையவராகவும் விளங்கினர்.

தம் அரசுக்குச் சிறப்புத் தருவனவற்றுள் முரசமும் ஒன்று என்று அக்கால அரசர்கள் கொண்டனர். அம்முரசினைத் தெய்வமாகவும் போற்றினர். தெய்வத்தை வழிபடுவது போன்ற வழிபாடு இதற்கும் உண்டு. இதற்கெனத் தனியிடம் வகுத்து, அதில் அம்முரசினை வைத்து, வேல்வீரரைக் காவல் புரியும்படி செய்தனர். அம்முரசத்திற்கு நீராட்டுவதும், பூச்சூட்டுவதும், வழிபாடு செய்வதும் தனிச்சடங்குகளாகக் கொண்டனர். அம்முரசத்தை நீராட்டிய பின்னர் தூய கட்டிலில் வைப்பர். அம்முரசத்திற்கு இழுக்கு

நேருமாயின், தமக்கும், தம் நாட்டிற்கும் இழுக்குண்டானதாகவே அரசர்கள் எண்ணுவர். அதற்காகத் தம் உயிரையும் கொடுப்பர்.

சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையினிடத்து மோசிகீரனார் ஒரு நாள் சென்றார். அரசன் ஏதோ அலுவல் காரணமாக வெளியில் சென்றிருந்தான். புலவர் பல காட்டு வழியினைக் கடந்து வந்ததால், களைப்பு மிகுதியாக இருந்தது. புலவர் அரசனைக் காணச் சென்ற இடம் முரசு கட்டில் அமைந்த பகுதியாகும். இளைப்பாற விழைந்த புலவர் முரசுகட்டில் இருக்கும் பகுதியைக் கண்டார். களைப்பின் மிகுதியால் முரசு கட்டில் வைக்கும் தூய இடமாயிற்றே யென்று அவர் எண்ணவில்லை. முரசு மண்ணிவரும் பொருட்டு வெளியில் சென்றிருந்தது. ஆதலின் கட்டில் மட்டும் தனியே இருந்தது. அக்கட்டிலில் மென்மைப் பட்டினாலாய படுக்கை விரிக்கப்பட்டிருந்தது. அக்கட்டிலில் நறுமணப் பொடியும், பூக்களும் தூவப்பட்டிருந்தன. களைப்புற்ற கண்கள் மென்மையைக் கண்டதும் களித்தன. எதற்காக இங்கு இக்கட்டில் வைக்கப்பட்டுள்ள தென்பதைப் புலவர் சோர்வின் மிகுதியால் அறியாதவராய், அக்கட்டிலின் மேல் படுத்து அயர்ந்து தூங்கிவிட்டார்.

அரசன் அவ்வழியாக வந்தான். அரசு கட்டிலில் யாரோ ஒருவர் துயில்வதைக் கண்டான். தூய்மைக் கெட்டதே யென்று கடுஞ்சினங் கொண்டவனாய் வாளினை ஓச்சியவண்ணம் கட்டிலின் அருகில் சென்றான். கைவாளைக் கழுத்திற்கு மேல் ஓங்குங்காலத்து உறங்குபவர் புலவரென்பதை அறிந்தான். ஓச்சிய

வாள் உறையுள் புகுந்தது. வாளேந்திய கை கவரி வீசமுற்பட்டது. அருகில் நின்ற அரசன் புலவரின் அறிவொளி மிக்க முகத்தினைக்கண்டான். அனுபவித்த வண்ணமாய் கவரிவீசும் வாய்ப்புக் கிடைத்ததே யென்று எண்ணியவனாய்க் களிப்புகொண்டு புலவரின் களைப்பு நீங்கக் கவரிவீசினான். களிற்றினை வீழ்த்தும் வீரத்தோள் கீரனாரின் களைப்பறிந்து விசிறிகொண்டு மெல்ல வீசிற்று.

மோசி கீரனார் களைப்பு தீர்ந்து கண்விழித்தார். கவரி வீசும் அரசனைக்கண்டு அஞ்சியவண்ணம் திடுக் குற்றெழுந்தார். "அரச! நினது செயல் இருந்தவா றென்னே! ஆ! நான் உறங்கிய இடம் முரசுகட்டிலா! எத்துணைப் பெருந்தவறு செய்தேன்! இப் பெருந்தவ றுக்கு மன்னிப்புண்டோ? நின் வாளுக்கு இரையாகத் தக்கவனாயிற்றே! இன்னும் உயிரோடு உள்ளேனே! இதுவரையும் என்னை உயிரோடு வைத்திருப்பது நீ தமிழ்க்கற்ற கல்வியின் பயன்போலும்! அதுவன்றி என் மேல் அன்புகொண்டு கவரியும் வீசுகின்றாய். தமிழின்மேல் வைத்த அன்பின் காரணமாகச் செய்தது இச்செயல் போலும்! நினது அருளின் செய்கை இருந்தவாறென்னே!" என்று அரசனின் செய்கை அறிந்து வியந்தார். (புறம். 50)

இவ்வாறு அக்கால மன்னர்கள் அருள் மனம் பெற்றவராக விளங்கினர். அவர்கள் அருளின் காரணமாகச் செய்த செயலை வியக்குந்தொறும், வியக் குந்தொறும், வியப்பு எல்லை கடந்துள்ளது.

அருள் தொண்டு

செல்வம் பெற்ருேர் அருள் மனம் பெற்றவராக விளங்கினர் என்பதை அறிந்தோம். அதுபோன்று அறிவுசான்ற புலவர்களும் அறிவின் மாட்சியினராக விளங்கினரேனும் அருள் மனம் பெற்றவர்களாகவும் விளங்கினர். அரசர்கள் அறத்தினின்றும் மாறுபடுவாராயின் அவர்களுக்கு அறத்தினை எடுத்துக் கூறி அருள்வழியில் செலுத்தும் அருள் தொண்டினைச் செய்துவந்தனர்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் மலையமான் திருமுடிக் காரியிடம் பகை கொண்டவன். மலையமான் திருமுடிக்காரியோ புலவர்பால் அன்பு கொண்டு அவர்தம் வாழ்வு நலம் பெறப் பொருள்களை வாரி வழங்கியவன். போரில் வெற்றியே காண்பவன். மூவேந்தர்கள் புகழும் ஆண்மை பெற்றவன். மாருேக் கத்து நப்பசலையார், கபிலர் முதலாய செந்நாப் புலவர் கள் சிறப்பித்துக் கூறும் பெருமை பெற்று விளங்கிய வன். இத்தகைய வண்மையும், ஆண்மையும், பெருமையும் உடைய மலையமான் பேரில் மாருப்பகைமை கொண்டவனுய்க் கிள்ளிவளவன் இருந்தான். மலையமான் இறந்தும் அவன்மேல் உற்றபகை தணியவில்லை; வளவன் மனத்தில் பகை நாளடைவில் வளர்ந்து வந்தது.

மலையமானது மக்கள் மழலைமொழி பேசும் இளஞ் சிறுவராயிருந்தனர். மலையமானது மக்கள் என அறிந் ததும் மனத்தில் வளர்ந்த பகைமை மக்களிடம் சென் றது. மழலை மொழி பேசும் மக்களாயிற்றே யென்று அம்மன்னன் அறியவில்லை. நம்மோடு மாறுபட்டவன் மலையமானே யொழிய அவனது மக்களல்ல வென்பதை

யும் அறியாதவனுயினன். மழலையைக் கொல்வதால் மாளாப்பழியினை யுறுவோமே யென்று அறியாவண்ணம் பகைமை அவன் கண்ணை மறைத்து விட்டது. அவன் கண்முன்னுல் நிற்பது மழலை மொழி பேசும் மக்களல்ல; மாறுபட்ட மலையமானின் பகைமையே யாம். இழையணி நெடுந்தேர் இரவலர்க்கீத்த மலையமானது மக்களாயிற்றே யென்று எண்ணுது கொலைக் களத்தில் கொண்டு வந்து நிறுத்துமாறு ஆணை யிட்டான்.

நாடாண்ட மன்னனது மக்கள், ஊர் நடு மன்றத்தில் வந்து நின்றனர். அம்மன்றத்தினைச் சுற்றி ஊர் மக்கள் குழுமினர். அவர்கள் நடுமன்றத்தில் நிற்கின்ற மக்களைக் கண்டு "நத்திச்சென்ற பரிசிலர்கள் உவக்குமாறு களிற்றினை ஈந்த காரியினது மக்களாயிற்றே! இழையணி நெடுந்தேர் இரவலர்க்கீந்தவனின் இளஞ் செல்வங்களாயிற்றே! இவனது உதவிபெற்றுப் போரில் வென்ற மூவேந்தரும் இன்று எங்குற்றனரோ!" என்று எண்ணி எண்ணி மக்கள் மாரிபோல் கண்ணீர் வடித்தனர்.

மன்றத்தில் நிறுத்தப்பட்ட மக்கள் அச்சுறுத்தும் வீரர் தம்மைச் சுற்றி நிற்றலைக்கண்டு அழுதுகொண்டிருந்தனர். எதிரே மதயானை ஒன்று வருவதைக் கண்ட மக்கள் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டவராயினர். மதயானை நம்மை மாய்க்க வருகின்றதே யென்று அம் மக்கள் அறியவில்லை. யானை, குதிரை முதலிய பொம்மைகளை வைத்து விளையாடும் பருவம் உள்ளவராதலால் அவ்வகையில் இதுவும் ஒன்றென்று எண்ணினர் போலும்.

அந்நிலையில் அரசன் அமைச்சர் புடைசூழ ஆசனத்தில் வந்து அமர்ந்தான். அவனைச்சுற்றி அமைச்சர்களும், அறிஞர்களும் ஆசனத்தில் அமர்ந்தனர். அவர்கள் அனைவரும் கண்ணை மருட்டும் பட்டாடை அணிந்து பெருமையுற வீற்றிருந்தனர். அரசன் கிள்ளிவளவன் அழகு மிகும் ஆடம்பரமான ஆடை அணிந்து இறுமாப்புடன் வீற்றிருந்தான். இத்தகைய காட்சிகள் அம்மக்களுக்கு மருட்கையுணர்வை ஊட்டின. மன்றத்தினை அம்மக்கள் என்றும் அறியாதவராதலால் புதுமையைக் கண்ட அவர்களது உள்ளம் பூரித்தது. ஆயினும் அல்லல் அவர்கள் அகத்தினை விட்டு நீங்கியபாடில்லை. அம்மக்களை அச்சமும், புதுமையும் ஆட்கொண்டதால் அவர்கள் அரசன் முதலிய அவையோரை மருண்ட நோக்கோடு சுற்றிச் சுற்றிப் பார்க்கின்றனர்.

அரசன் மக்களை ஒறுக்க விழைந்தான். அவன் ஒறுத்தல் அறத்திற்கு ஒத்ததோ? அரசன் ஒறுத்தலைச் செய்வானாயின் அவ்வொறுத்தல் அறத்திற்கு மாறுபடாத நிலையில் அமைய வேண்டும். அவ்வொறுத்தலையும் அரசன் பிழைக்குத்தக்க அளவில் செய்தல் வேண்டும். அதில் பிழைத்தல் செய்வானாயின் பெரும்பழி இவனைக் கொல்லும். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஆராயாது கோவலனைக் கொன்றதால் அறமுறை பிழைத்தது எனக் கருதி,

"யானோ அரசன்! யானே கள்வன்!
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதற் பிழைத்தது! கெடுக என் ஆயுள்"

என்று அரியணையிலிருந்து அரற்றிய வண்ணம் கீழே

வீழ்ந்து இறந்தான். அதனால் அரசன் ஆராயாது ஒரு முடிவினைக் கொள்வது ஆபத்தேயாம். ஒன்றினை நன்கு ஆராய்தல் வேண்டும். ஆராய்ந்த பின்னரே ஒரு முடிவினைக் கொள்ளல் வேண்டும். முடிவு கொண்ட பிறகு மனம் மாறுபடுவது மாசினை உண்டாக்கும்.

''எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு''

என்பது வள்ளுவர் வாய்மொழி. ஆதலின் அரசனது பொறுப்பு இத்தகையது. ஆனால் கிள்ளிவளவன் கொண்ட முடிவு என்ன? ஆராய்ந்த முடிவா? ஆத்திரத்தின் முடிவல்லவா! இஃது அறமுறைக்கேற்ற செயலோ? மன்னன் மேல் கொண்ட பகைக்காக மக்களைக் கொல்ல வேண்டுமென்று மனுநெறி கூறிற்றுண்டோ? மலையமான் பகைவனென்றால் அவனது மக்களும் பகைவராவரோ? மன்னன், மக்களிடத்தில் பகைமை கொள்வது மதியுடைத்தோ? மக்களைக் காக்கும் மன்னன் தன்னலம் பேணலாமா? தன்னுயிர் போல் மன்னுயிரையும் கருதுவது மன்னனது பண்பாயிற்றே! அப் பண்பு நலம் பகைமையின் காரணமாக மாய்ந்ததோ?

மதயானையால் மக்களைக் கொல்லுமாறு மன்னனிடத்திலிருந்து ஆணை பிறந்தது. மன்னனது மனத்தில் அறம் மாய்ந்துவிட்டது. கொடுமை குடி கொண்டது. பகைமை ஆட்சி செலுத்தியது. ஆதலின் அவனதுவுள்ளத்தில் இரக்கம் குடிபுகவில்லை. மன்னனது ஆணையைச் சிரமேற் கொண்டு மக்களைக் கொல்ல வீரர்கள் துணிந்தனர். மன்றத்தாரும் மன்னனது செய்கைக்கு

மனம் ஒப்பியவர்கள் போல் வாய்திறவாது அமைதி காட்டினர். அறிவுரை கூறும் அமைச்சர்களுக்கும் இந்நிலையில் அரசனிடத்தில் கூறுவது நமக்கு ஆபத்தே யொன்று அவர்களது உள்ளமும் தன்னலத்தால் ஒடுங்கியது. மற்றையோர் உள்ளம் மன்னனது சீற்றம் சுட்டெரிக்குமே யென்று அஞ்சியதால் அமைதி கொண்டன. அவர்களிலே அறிவு சான்ற புலவரும் ஒருவர். அவர் அஞ்சாத்தன்மையராய் வீற்றிருந்தார். அவர் எவர்க்கும் அடங்கி ஒடுங்குபவரல்லர். அருள் என்ற பண்பே அவரிடத்தில் தலை சிறந்து நின்றது.

அஞ்சாத்தன்மையராய் அரசனை நோக்கி எழுந்தார். அரசனது சீற்றத்திற்கு ஆளாவோமே யென்று அஞ்சினரல்லர். அரசனை அணுகினர். உண்மையை எடுத்துக்கூற முயன்றார். "வேந்தே! நீ கொண்டதை நிறைவேற்றுவதற்கு முன் யான் சொல்வன கேட்டு, அதற்குப் பிறகு நீ செய்வன செய்க. நீயோ பறவைக்கும் அருள்செய்யும் அருளாளன் மரபில் வந்தாய்! மற்றும் உயிர்கள் உற்ற உறுகணைத் துடைத்த சோழர் குடியில் தோன்றினாய். நீ கொல்லத் துணிந்த மக்களோ அறிவால் உழுதுண்ணும் புலவரது புலமையைக் காத்து அவர்களது வறுமை கண்டஞ்சி அவர்களுக்கு வேண்டுவன வாரிக்கொடுத்த வள்ளலின் மக்கள். அம்மக்கள் களிறு கண்டதும் அழுகை மறந்த மனத்தை ஆராய்க. மக்கள் மன்றத்தை முன்பு அறியாத வராதலின் புதுமை கண்டு மருண்டு நோக்குவதைக் காண்க. அவர்கள் உள்ளத்தே புதியதோர் துன்ப உணர்வு உள்ளதென்பதையும் உணர்வாய். யான் கூறுவது இவையே, நீ கேட்டனையாயின் வேட்டது செய்க" என்று விளம்பினர். (புறம். 46)

அருள் உணர்வுகொண்ட கோவூர்கிழார் அரசனது கொடுமையை மாய்த்து அவனது அகத்தில் அருள் உணர்வு கொள்ளுமாறு செய்தார். அவனது குடியை நினைவுறுத்தி அருள்மரபின் தொடர்பினைக் காட்டினார். மலையமான் நினது மாறுபட்ட தலைவனென்று காட்டாது, அறிவு சான்ற புலவர்களை ஆதரித்த அருளாளனது மக்கள் என்பதைக் காட்டி அவன் மனம் மாறும்படி செய்தார்.

மன்னன் கொண்ட கொடுமை ஒழிந்தது. மக்கள் மேல் மன்னன் அருள் உணர்வு கொண்டான். பற்று என்ற உணர்வை மாய்த்த பகைமை ஒழிந்தது. பச்சிளஞ் சிறார்மேல் பாசங்கொண்டான் மன்னன். மலையமானுக நோக்கிய கண் மாறுபட்டு மழலைமொழி பேசும் மக்கள் என்பதைக் கண்டது. கோவூர் கிழாரின் பொன்மொழிகள் அவன் உள்ளத்தில் குடிகொண்ட கொடுமைகளை நீக்கி அருள் உணர்வை உண்டாக்கின. மன்னனது பகையால் மாய்ந் தொழிய வேண்டிய மக்களைப் புலவரின் அருள் தொண்டு காப்பாற்றியது.

தொண்டுள்ளம் படைத்த கோவூர்கிழாருக்கு மற்றொரு வாய்ப்பும் கிடைத்தது. இளந்தத்தனார் என்னும் பைந்தமிழ்ப் புலவர் சோழன் நலங்கிள்ளி யோடு பழகியவர். வறுமையின் காரணமாக உறையூரை ஆண்ட நெடுங்கிள்ளி யிடத்துப் பரிசில் பெறச் சென்றார். நெடுங்கிள்ளியோ நலங்கிள்ளியோ யினிடத்தில் நெடுநாள் பகை கொண்டவனாய் இருந்தான். ஆதலின் தம்மை நாடிவந்த புலவரை அந் நாட்டு ஒற்றன் என்று துணிந்தான். பகை ஒற்றர்களை வேங்தொறுத்தல் நாட்டிற்கு நலனுதலின். புலவராயினும் ஒற்றன் என்பதற்காகக் கொலை செய்யத் துணிந்தான்.

கோவூர் கிழாருக்கு இச்செய்தி எட்டியது. அவர் தனக்கே வந்துற்ற துன்பமென்றெண்ணி நெடுங்கிள்ளி யின் பால் விரைந்து சென்ருர். நெடுங்கிள்ளியை நோக்கி "பெரும! பரிசில் வாழ்க்கை எத்தகைத்து! பழு மரம் உள்ளூர் பழுத்தது போன்று பரிசில் ஈயும் செல் வரை நாடிச் செல்வதும், நெடும் வழியென்று பொருட் படுத்தாது காட்டினைக் கடந்தும், திருந்தா நாவினல் இயன்றனபாடியும், அவர்கள் ஈயும் பரிசிலைப் பெற்று மகிழ்தலும், அப் பொருளினல் சுற்றத்தாரை உண் பித்தலும், எஞ்சியுள்ள பொருளைப் பாதுகாவாது கவலை யின்றி உளம்மகிழ்ந்து பிறர்க்குக் கொடுத்தாலும்' புரப் போரால் பெறும் சிறப்பு கருதித்தேடி முயல்வதும் ஆகிய இவைகளே பரிசில் வாழ்க்கை. இப்பரிசில் வாழ்க்கையை மேற்கொண்ட புலவர்கள் பிறர்க்குத் தீங்கு செய்யும் கொடுமையுள்ளவர்களோ? ஒரு போதும் இல்லை. அவர்கள் தம்மோடு மாறுபட்ட கல்வி யுடையாரை எதிர்த்து வெற்றி கொண்டு வீறுபெற தலைமைகாணும் தகைமையோர். நீயோ செல்வத்தால் தலைமையுடையாய். புலவரோ அறிவுச் செல்வத்தால் தலைமையுடையவராவர். ஆதலின் நின்னை யொக்கும் தலைமையும் அவர்கள்பால் உண்டு'' (புறம். 47)

ஆதலின், பெரும! அவரை நீ கொல்லத் துணிந் தது மிகப் பெரும் பிழையாகும். இவரை இன்னே விட்டு விடுக என்று கூறி இளந்தத்தனுரைக் காப்பாற்றி ஞர். இளந்தத்தனுர் வாழ்ந்தார். புலமையும் வாழ்ந் தது. கோவூர் கிழாரின் தொண்டல்லவா இளந்தத்த னுரைக் காப்பாற்றியது!

இத்தகைய அருள் தொண்டினைப் புலவர்கள் மேற்கொண்டு பண்டு வாழ்ந்தனர். அரசர்கள் மாறுபட்டுப் போர் செய்யுங்காலத்துப் புலவர்கள் போரை நிறுத்தினர். போரினால் ஏற்படும் அழிவினை எடுத்துக் கூறி அரசர்களையும் அருள்மனம் உடையவராகச் செய்தனர். அரசன் அறியாமை கொள்ளுங் காலத்து அறத்தினை எடுத்துக் கூறி, நாட்டை நல்வழியில் செலுத்தும் தொண்டினை மேற்கொண்டவராகவும் புலவர்கள் விளங்கினர். புலவர்களது தொண்டே அருள் தொண்டாகும். அத்தகைய அருள் தொண்டினை யாவரும் பெறுவாராயின் நாடு நலம் பெற நனிமிக வழியுண்டு.

4. நட்பு

நட்பின் உயர்வு

நட்பு என்பது அன்பின் பற்றுக்கோடே யாகும். இருவர் உள்ளத்தும் அன்பும், உணர்வும் ஒன்றுபடுமாயின் அதுவே நாளடைவில் நட்பாக மலர்கின்றது. நட்பின் உயர்வைக் கருதித் தெய்வப் புலவர் திருவள்ளுவரும் ஐம்பது குறட்பாக்களால் அதன் நன்மை தீமைகளைப் பன்முகமாக ஆய்ந்து கூறுகின்றார். நட்பினை இத்துணைக் குறட்பாக்களால் வள்ளுவர் விரித்துரைப்பதுகொண்டு நட்பின் உயர்வை நன்கு அறியலாம். இதற்கு வேறு சான்றுகள் வேண்டா.

நட்பினை ஒருவன் கொளல் வேண்டின் ஆய்ந்தாய்ந்து கொளல் வேண்டும். இல்லையாயின் அந் நட்பு அவனுக்குச் சாவதுபோன்ற துன்பத்தினை அளிக்கும்:—

"ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும்."

அவ்வாறு ஆராய்ந்து ஒருவரிடத்து நட்பினைக் கொள்ளும் காலத்து அவரது குணத்தையும், குடிப் பிறப்பையும், குற்றத்தையும், குறையாத இனத்தாரின் இயல்பையும் அறிந்து அவரோடு நட்புக் கொளல் வேண்டும்:—

**"குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு"**

நட்புச் செய்வோரிடத்து மேற்கூறிய அனைத்தும் உளவோ என ஆராய்வதின் நோக்கம், அவர் மாசற்றவராக உளரா வென்பதை உணர்வதற்கே ஆகும். மாசற்ற மாண்பினை உடையவராக இருப்பின் அவரை ஆராயாது, அணுகிப் பழகுதலின்றி அவரோடு நட்புக் கொளலாம். அத்தகையாரோடு நட்புக் கொண்டு பழகப் பழக மேன்மேலும் இன்பமளிக்கும். "பழகப் பழகப் பாலும் புளிக்கும்" என்னும் பழமொழி இங்குப் பொய்ம்மொழியாகும். கற்கும்தோறும் கற்கும்தோறும் நல்நூல் களிப்பினை அளிப்பது போன்று மேன்மக்களது நட்பு பழகுந்தொறும் பழகுந்தொறும் மேலான இன்பத்தினை இனிது நல்கும்:—

**"நவில்தொறும் நூல் நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு"**

என்பது பொய்யாமொழியாகும்.

கோப்பெருஞ் சோழன் பிசிராந்தையாரை முன் பின் கண்டவனல்லன். பிசிராந்தையார் பாண்டி நாட்டில் வாழ்ந்தார். கோப்பெருஞ் சோழன் சோழநாட்டில் வாழ்ந்தான். அன்றியும் பாண்டியன் அறிவுடை நம்பியின் அவைக்களப் புலவராகப் பிசிராந்தையார் விளங்கினர். ஆதலின் இவ்விருவர் நாடும் வெவ்வேறாகும். இத்தகைய வேறுபாடுகள் இடையே இருந்தும், இவ்விருவரும் நண்பராயினர். சோழன் புலவரின் புகழினைப் பிறர்வாயிலாக அறிந்தான். புலவரும் அவனது ஆட்சிச் சிறப்பினை அறிஞர்கள் மூலம் கேட்டறிந்தார். ஒருவரை

ஒருவர் நேரிற்கண்டிருந்தும் இருவரிடையே உணர்வு வளர்ந்தது. அவ்வுணர்வின் காரணமாக இருவரிடத்தும் மாறு நட்பு மனத்தில் வேரூன்றிற்று.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்"

என்ற வள்ளுவர் வாக்குக்கு இவ்விருவர் நட்பும் இலக்கியமாக உளது. இத்தகைய நட்பினராகப் பண்டைக்காலத்தில் பலர் வாழ்ந்தனர்.

பண்டைக்காலப் புலவர்கள் அரசர்களோடு நட்புகொண்டனர். அவர்கள் உதவி பெற்றே தம் வாழ்வினை நடத்தினர். அவ்வாறாயினும் அச்செல்வர்கள் அறத்தினின்று மாறுபடும்போது இடித்துரைக்கும் பண்பினராய் வாழ்ந்தனர். இடித்துக் கூறுவதனால் நண்பர்களது உள்ளம் புண்படுமோ என்று புலவர்கள் எண்ணினர் அல்லர். நட்பினரிடத்துக் குற்றங்கண்டபோது இடித்துக் கூறும் நட்பினரே உண்மை நட்பினராவர்.

" நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு"

என்று வள்ளுவர் வாக்கு வலியுறுத்துவதை அறியலாம்.

ஔவையார் அதியமானிடத்துக் கொண்ட நட்பு எத்தகைத்து! இறப்பினைத் தவிர்க்கும் அமிழ்தம் போன்று கிடைக்கப்பெறாத கருநெல்லிக் கனியை அரிய முயற்சியால் அதியமான் பெற்றகாலை அவனது உள்ளம் தன்னலம் நாடவில்லை. ஔவையாரை நாடிற்று. அறிவு சான்ற தமது நண்பரின் உயிர் பல்

லாண்டு வாழ வேண்டுமென்று எண்ணிற்று. பழுத்த உடலினையும், கையில் விழுத்தண்டினையும் ஊன்றி வாழும் அம் முதுமை, மேலும் முதிராது இளமை பெறின் தம் போன்ருர்க்குப் பெரும்பயன் விளையு மென்று அவ்வுள்ளம் விரும்பிற்று. அத்தகைய உள்ளத்தினைப் பெற்று உண்மை நட்பு கொண்டு அதியமான் ஔவையாரிடத்துப் பழகினுன். அவன் ஔவையாருக்குப் பரிசில் தரக் காலம் தாழ்த்திய போது ஔவையார் வெகுண்டு அவனுக்குப் பல அறிவுரைகள் கூறுகின்ருர். அதியமான் ஔவையாரை மதியாது பரிசில் கொடுக்கக் காலம் நீட்டினுனைல்லன். ஔவையார் அதியமான் இல்லத்தில் அதிக நாள் தங்குதலின்றிப் பல அரசர்களிடத்துச் சென்று அறிவுரை கூறும் அரிய தொண்டினை மேற்கொண்டிருந்தனர். அதியமான் ஔவையாரைப் பிரிந்து தனித்து அதிக நாள் வாழாதவன். ஆதலின் ஔவையார் அரண்மனையில் இல்லாதபோது அகமுருகினுன். எப்பொழுது காண்போமோ வென்ற ஏக்கம் அவன்பால் இருந்தது.

ஔவையார் அதியமானது அரண்மனைக்கண் வந்தடைந்தார். அதியமான் ஔவையாரைத் தனது அரண்மனையில் அதிக நாள் தங்குமாறு செய்ய வேண்டுமென்று விரும்பினுன். ஔவையார் பரிசில் விழைந்த போது அன்றே கொடுத்தனுப்பாது அவரோடு அளவளாவுதலிலேயே காலத்தைக் கழித்தான். விழைந்த போது அதியமான் பரிசில் கொடுக்கவில்லையே யென்று ஔவையார் அதியமானைத் தவருக உணர்ந்தார். ஆதலின் அவனுக்கு அறிவுரை கூற முற்பட்டார். அதியமானது உள்ளம் வருந்த அறிவுரை கூற முற்படுகின்ருேமே யென்று அவர் எண்ணவில்லை. அன்பினின்று

மாறுபட்டானே என்ற அச்சமே அவரை வாட்டியது. அதனை அகத்தில் ஒடுக்கி அடக்காதவராய் அதியமான் அறிவு பெற வேண்டுமென்றே எண்ணினர். அதியமான் அறியாக்காரணத்தால் தவறு செய்திருப்பின் அதனைத் திருத்த வேண்டுமென்று எண்ணினர். ஆகவே அவனுக்கு வேண்டும் அறிவுரை கூறுகின்றார்.

"வாயில் காப்போய்! வாயில் காப்போய்! வள்ளண்மை யுடையாரது செவியிடத்து விளங்கிய சொற்களை விதைத்துத் தாம் வேண்டியது பெறுவதும், மேம்பாடு பெருதற்கு வருந்துவதும் ஆகிய இப்பரிசில் வாழ்வையுடைய பரிசிலர்க்கு அடையாத வாயில்காப்போய்! குரிசிலாகிய நெடுமானஞ்சி தன் தரம் இத்தன்மையது என்றறியானே? அதனை அறியாவிடினும் என் தரத்தையேனும் அறியான் கொல்லோ? அறிவும் புகழு முடையோர் இவ்வுலகத்து இல்லாது இறந்தனரோ? இந்நாடு வண்மை இன்றி வறுமை கொண்டு வாழும் நாடல்ல. ஆகவே இப்பொழுதே புறப்படுகின்றேம். எமது யாழ் முதலான கருவிகளை மூட்டையாய்க் கட்டினேம். இவனன்றி எங்கட்கு இல்லையோ இடம்? எத்திசைச் செலினும் அத்திசையில் எம்மை அன்போடு உபசரித்துச் சோறிடுவார் பலருளர். இதனை நீ நன்கு உணர்வாயாக" என்று முனிந்து கூறிப் புறப்படுவதற்கு முற்பட்டார். அதியமான் ஔவையாரிடத்து விரைந்து சென்று, தாம் பரிசில் கொடுக்கக் காலம் தாழ்த்தியதற்குக் காரணம் இன்னதெனக்கூறி, அவருக்கு வரிசைமிக்க பரிசில் அளவின்றி அளித்தான். (புறம். 206).

அதியமான் ஔவையாருக்குப் பரிசில் கொடுக்கக் காலம் தாழ்த்தியது அன்பு மாறுபட்டதால் அன்று

என்பதை அறிவோம். ஆனால் ஔவை யாரிடத்துக் கொண்ட நட்பின் உரிமை கருதி அவரைக் காலம் தாழ்த்தும்படி செய்தான். திருவள்ளுவரும் "வருந்தத் தக்க செயல்களை நண்பர் செய்தால், அதற்குக் காரணம் அறியாமை என்றாவது, மிகுந்த உரிமை என்றாவது உணரவேண்டும்" என்று கூறுகின்றார்.—

"பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்"

பாண்டியன் அறிவுடைநம்பி அறியாது அறமுறை பிழைத்தான். அவனது அவைக்களப் புலவரான பிசிராந்தையார் அதனை அறிந்து அவனுக்கு அறிவுரை கூற முற்பட்டனர். ஆனால் பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழனின் உயிர் நட்பினர். அதனைப் பாண்டியன் அறிந்தும் புலவர்பால் வைத்த அன்பு நீங்கினானில்லை. அவ்வாறே புலவரும் அவன்மேல் அளவு கடந்த அன்பினையுடையவரா யிருந்தார். அவனது அரசாட்சியின் கீழ் அந்நாட்டு மக்களும், அவரும் இனிது வாழ்ந்தனர். சோழனோடு வடக்கிருந்த காலை தமது தலைமயிர் நரைத்தலில்லாமைக்குச் சான்றோர் காரணம் வினவியபோது பின்வருமாறு கூறினார்.

"எனது மனைவியோ மாட்சிமை மிக்கவள். என் மக்களும் மதிநலம் பெற்ற மாண்புடையவராவர். ஏவலாளரும் எமது கருத்தறிந்து ஒழுகும் இயல்பினர். எம் பாண்டியனும் அல்லவை செய்யாது அறம் காக்கும் செங்கோலன். ஆன்றவிந்தடங்கிய கொள்கையுடைய சான்றோர் பலர் யான் வாழும் ஊரின்கண் உள்ளனர். ஆதலின் கவலை என்பதே

எனக்கில்லை. இதனால் நரை அணுகாது பல ஆண்டு களாய் வாழ்கின்றேன் என்றார்.":—

யாண்டுபல ஆக நரைஇல ஆகுதல்
யாங்(கு)ஆ கியர்என வினவுதிர் ஆயின்
மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்,
யான்கண் டனையர்என் இளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன் தலை
ஆன்(று) அவிந்(து) அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே.'' (புறம். **191**)

பாண்டியனது அரசாட்சி இத்தகைத்தென்று அங்கு நின்ற சான்றோர்கள் அறியுமாறு புலவர் கூறினர். நம் நண்பன் சோழனைப் புகழாது பாண்டியனைப் புகழ் கின்றோமே யென்று புலவர் எண்ணினரல்லர். இத்த கைய பாண்டியனைத்தான் புலவர் எச்சரிக்க முற்பட் டார் ஒரு முறை பாண்டியன் வரிசையுணராத சில அரசியல் அதிகாரிகளின் தூண்டுதல் பேரில் மக்க ளிடத்து அன்பின்றி வரி கொள்ளும் வகையினைக் கைக் கொண்டான். அதனை அறிந்தார் பிசிராந்தையார். தாம் இடித்துரைப்பதால் அரசன் தம்மேல் வைத்த அன்பு மாறுபடுமோவென்று புலவர் எண்ணினரல்லர். நண்பர் நெறி கடந்துசெல்லும்போது முற்படச் சென்று இடித்துரைப்பதுதானே நட்பின் இயல்பு. ஆதலின் அறிவுடைய வேந்தன் நெறி அறிந்து வரிபெறும் முறை யினை மன்னனுக்கு விளங்க அறிவுறுத்தல் வேண்டு மென்று எண்ணிய புலவர், அறிவுடை நம்பியை நோக்கிப் பின்வருமாறு கூறினர்.

"நெல் வயலின் கண் யானைத் தனித்துப் புகுந்து உண்ணுதல் செய்யின் நூறு காணியாயினும் அழிவு

றும். வாயின்கண் உணவாய்ப் புகுந்த நெல்லைவிட அதன் கால்களாற் சிதைவது பெரும்பகுதியாகும். நன்றாக முற்றி விளைந்த நெல்லையறுத்த நாள்தோறும் இவ்வளவென்று அளவுசெய்து கவளமாகக் கொடுத்து வரின், ஒரு மாவிற் குறைந்த சிறிய நிலத்தின் நெற்கதிரும் பன்னாள் உணவாகப் பயன்படும். அதுபோன்று அறிவுடைய அரசன் மக்கள்பால் வரிபெறும் முறையை அறிந்து வரிகொள்வானாயின் அவனது அரசும் சிறக்கும். அவனுடைய நாடு கோடிக்கணக்கான பொருளைச் சேர்த்துக் கொடுத்து வளமலிந்த நாடாக வாழும். அன்றி அரசன் அறிவின் திண்மை இல்லாதவனாகித் தரம் அறியாத அமைச்சர் முதலிய சுற்றத்துடன் கூடி அன்பு கெடக் கொள்ளும் வரிப்பொருளை விரும்பித் தவறு செய்வானாயின், யானை புகுந்த நிலம் அவ்யானைக்கும் நிலைத்த உணவினைத் தராது தானும் அழிவது போல, அவனும் உண்ணப் பெறான். அவனது நாடும் சிதையும்'' என்று பாண்டியனுக்கு அறிவுறுத்தினார்.

புலவர் கூறிய பொருளுரைறையினைக் கேட்ட பாண்டியன், நாட்டு மக்கள் பால் பொருள் பெறும் நெறி அறிந்து வரிப்பொருளை வாங்கும் அறிவுடைய வேந்தனாய் விளங்கினான். மக்களும் "பாண்டியன் அறிவுடை நம்பி" என்று அவனைப் பாராட்டினர். இதனால் புலவர்கள் அரசர்களோடு கொண்ட நட்பு நகுதற் பொருட்டன்று. நெறிகடந்தபோது இடித்துரைத்து நன்னெறிக்கண் செலுத்தும் நல் நட்பினராக வாழ்ந்தனர். பிசிராந்தையார் சோழ நாட்டார் வியக்குமாறு பாண்டியனது ஆட்சித் திறனை எடுத்தோதினார். அவரே பாண்டியனை அடைந்தபோது அவனை வெறும் புகழ்ச்சியாகப் புகழ்ந்துரையாது அவனுக்கு வேண்டிய

அறிவுரையை மறையாது எடுத்தோதினர். இது வன்றே உயர்ந்த நட்பு!

நட்பிழந்து வாழாமை

நட்பின் உயர்வு இத்தகைத் தென்பதை முன்னர் அறிந்தோம். அத்தகைய நட்பினர் தம் நண்பர்க்கு அழிவு வந்துற்ற காலத்து அவ் அழிவினை நீக்கி அவர் மாயின் தாமும் அவரோடு மாய்வர்:—

**"அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு''**

என்று வள்ளுவப் பெருந்தகையார் கூறுவதன் மூலமும் இதனை அறியலாம். இதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியது கோப்பெருஞ்சோழனோடு பிசிராந்தை யாரும், பொத்தியாரும் கொண்ட நட்பு. இவர்கள் நட்பு "அழிவின் கண் அல்லல் உழக்கும் நட்பாக" இருந்தது.

கோப்பெருஞ் சோழன் என்பவன் உறந்தையைத் தலைநகராகக்கொண்டு அரசாண்ட அரசனவான். தீஞ் சுவை கெழுமிய செந்தமிழ்ப் பாக்கள் பாடுவதில் சிறப்பு மிக்கவன். உயர்ந்த கோட்பாடு உடையவனுக வும் விளங்கியவன். அறத்தினின்று மாறுபடாத அறவோனுகவும் வாழ்ந்தான். புலவர் பெருமக்க ளிடத்துத் தாம் வைத்திருந்த அன்பாலும், மதிப்பாலும் அவர்களுடைய அன்பை எல்லாம் கொள்ளை கொண் டான். தோலா நல்லிசை மேலோராகிய பிசிராந்தை யார், பொத்தியார் என்னும் தண்டமிழ்ப் புலவர்கள் இவனது ஆருயிர் நண்பராக அமையப் பெற்றூர்கள்.

கோப்பெருஞ் சோழனோடு பிசிராந்தையார் கொண்ட நட்பு ஆராய்ந்து கொண்ட நட்பு அல்ல வென்பதை அறிவோம். ஒருவர் ஒருவருடைய குணங் களைக் கேள்வியுற்ற மாத்திரையானே அவர்கள்பால் அடங்கியிருந்த உழுவலன்பு வெளிப்பட்டு அவ்விரு வரையும் ஒத்த உணர்ச்சியுடைய நட்பினராக்கி விட்டது. கோப்பெருஞ் சோழனும் பிசிராந்தை யாரும் ஒருவரை யொருவர் கண்டு களிப்புறுமலேயே அவ்விருவர் நட்பும் வளர்பிறை போல் வளர்ந்து வந்தது. இவ்வாறு வளர்ந்து வருங்காலத்தில் நிகழ்ந்த தொரு செய்தி நெஞ்சினை உருக்கும் தன்மையது.

இவ்வரசர் பெருந்தகைக்கு இரண்டு மக்கள் இருந் தனர். இவர்கள்,

> **"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
> எச்சத்தாற் காணப் படும்"**

என்று ஆன்றோர் கூறும் பொது நீதிக்கு விலக்காக வாழ்ந்தனர். தகவுடைய சோழனுக்குத் தகவிலா தீய மக்களாக இவர்கள் இருந்தனர். அன்பிற்கே நிலைக் களமான தனது தந்தையின்மேல் இம்மக்கள் படை யெடுக்க முற்பட்டாற்களென்றால் இம் மக்களின் கொடியபண்பைக் கூறவும் வேண்டுமோ? கொடியவர் களான இவனது மக்கள் போர் குறித்து வருதலைக் கோப்பெருஞ் சோழன் கண்டான். சினங் கொண்டான். அக் கொடியவர்மேல் தாமும் போர் செய்தற்குச் சென்றான். இதனை அறிந்தார் புல்லாற்றூர் எயிற்றி யனார். தந்தை மகனோடு போர்செய்து தோற்பினும், மகன் போர்க்களத்து இறப்பினும் சோழனது அரசியல் பிறர் தூற்றுதலுக்கு ஆளாகுமே என்றெண்ணி கோப்

பெருஞ் சோழனிடத்துச் சென்றார். அப்பெருங் கோவைப் பார்த்துப் பின் வருமாறு கூறினார்.

"அமரின்கண் பகைவரை அடுதல்செய்யும் வென்றியையும், வலிய முயற்சியையும், நிலமுழுவதும் நிழல் செய்யும் வெண்கொற்றக் குடையினையும் உடைய வேந்தே! நின்னுடன் போர் செய்தற்கு வந்த இவ்விருவரும் சேர, பாண்டியர்களல்லர்; நீயும் அவர்கட்குப் பகை அரசன் அல்லை; நீ இந்நிலவுலகத்துப் பரந்த புகழை நிலை நிறுத்தி அமரர் உலகம் அடைந்தபின் இவ்வரசாட்சி அவர்கட்கே உரியதாகும். நின்னுடன் போர் செய்வதற்கு வந்த நினது மக்கள் தோற்பின் நினது பெருஞ்செல்வத்தை யாவர்க்களிப்பாய்? நீயோ அவரிடம் தோற்பின் நின்னை இகழும் பகைவர் உவக்கும்படியாக இவ்வுலகத்தே பழியை நிறுத்துவாய்; ஆதலால் நினது மறன் ஒழிவதாக. விண்ணோர்கள் விருப்புடன் உன்னை எதிர்கொள்ளுமாறு நல்வினை செய்தல் வேண்டும். அதற்கு விரைந்து எழுக; நினது உள்ளம் வாழ்வதாக."

இவ்வாறு புலவரால் தெருட்டப் பெற்றபின் சோழனது சினம் அவிந்தது. ஆயினும் மானம் அழிந்தபின் உயிர் வாழாது இறப்பதே மேலேன்று கருதினான்.

"மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே"
"மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்"

என்பன ஆன்றோரின் வாக்கல்லவா! ஆகவே சோழன் தமது குடிக்குத் தமது மக்களால் பழி உண்டாதலை உன்னி வடக்கிருக்கத் துணிந்தான்.

சோழன் ஆற்றிடைக் குறைபோலும் தூய தொரு தனியிடத்தை எய்தி, வடக்கு நோக்கியிருந்து உண்ணு நோன்பினனுய் கடவுட் சிந்தையுடன் உயிர் விடும் வடக்கிருத்தலை மேற்கொண்டான். அப்பொழுது சோழன் அங்கே குழுமியிருந்த சான்றோர்களைப் பார்த்து "என் நண்பர் இப்பொழுது வருவார்" என்ருன். அதற்குச் சான்றோர்கள் 'அவர் வாரார்' என்றனர். அதற்கு அரசன் "என் உயிரைப் பாதுகாக்கும் என் நண்பர் பாண்டி நாட்டிலுள்ளும் சேய்மையின் உள்ள தாகிய 'பிசிர்' என்னும் ஊரிடத்தில் தான் உள்ளனர் என்று சொல்லுவர்; ஆயினும் யான் செல்வம் உடைய காலத்து அவர் வாராதிருப்பினும், யான் துன்புறும் காலத்து வருதலின்றி நில்லார்" என்ருன் :—

"தென்னம் பொருப்ப னன்ஞட் டுள்ளும்
பிசிரோன் என்பஎன் உயிரோம் புநனே
செல்வக் காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லான் மன்னே" (புறம். 215)

இவ்வாறு கூறியபிறகு சோழன் "என் அருகிலே என் நண்பர்க்கும் சேர்ந்து இடம் ஒதுக்குவீர்" என்ருன். அது கேட்ட சான்ருேர் இவன் கூறுவதன் கண் ஐயப் பாடு கொண்டு "அரசே ஆந்தையார் நின்னைக் கேட் டறிந்தவரேயன்றி நின்னைக் காண்டலை அறியார். பல ஆண்டுகள் தவருது பழகிப் போந்த உரிமையுடையாரா யினும் நீ கூறியவாறு வழுவுதலின்றி ஒழுகுதல் அரி தேயாகும்." என்றனர். அதனைக்கேட்ட அரசன் அவர் களுக்குப் பின்வருமாறு கூறினன்.

நிறைந்த அறிவினையுடையீர்! தாங்கள் அவ்வாறு ஐயுறுதல் வேண்டுவதன்று; அவர் என்னை என்றும்

புறக்கணித்தவரல்லர்; இனிய குணங்களையுடையவர்; பிணித்த நட்பினை உடையவர், புகழை அழிக்கும் பொய்மையை விரும்பார்; தம் பெயரைப் பிறர்க்குச் சொல்லும் பொழுது என் பெயர் கோப்பெருஞ்சோழன்' என்று என் பெயரையே தன் பெயராகச் சொல்லும் அன்பினர்; மேலும் யான் இவ்வாறு துயருறுங் காலத்து ஆண்டு நில்லார்; இப்போழுதே வருவர்; அவர்க்கும் இடம் ஒழிக்க'' என்முன். (புறம். 216)

இங்ஙனம் கூறிக் கோப்பெரும் சோழர் வடக்கிருக்கவே, பிசிராந்தையாரும் அவன் கூறியாங்கு அப்பொழுதே வந்து சேர்ந்தனர். சோழனது ஆருயிர் நண்பர் பொத்தியார் இச் செய்தியை அறிந்தார். பொத்தியாரோ சோழனைப் பிரிந்து வாழாதவர். என்றும் அவனோடு உடனுறையும் என்பு கெழுமிய நண்பராவர். இதனைப் பிசிராந்தையாரும் பாணர் சுற்றத்தினரது பசிக்குப்பகைவனாகிய கோப்பெருஞ் சோழன், உறையூரின் கண் புரையில்லாத நட்பினையுடைய பொத்தியென்னும் புலவனோடு பெருமகிழ்ச்சி கொண்டு பெருமையுற உள்ளான்'' என்று கூறியுள்ளார். இத்தகைய உயிர் நட்பினராகியள் பொத்தியார் இச் செய்தியை அறிந்ததும் அளவிலடங்கா வியப்பும் ஆராத்துயரும் கொண்டு பின்வருமாறு கூறினர்

"இவ்வரசன் எத்துணைப் பெரிய சிறப்புகளுடன் கூடியிருந்தும், அவற்றை யெல்லாம் கைவிட்டு இவ்விடத்தே இப்படி வரத்துணிதல் நினைக்குமிடத்து வியப்பினை யுடையது. வேற்று வேந்தனது நாட்டின் கண் விளக்கம் அமைந்த சான்றோன், புகழ் மேம்பாடாக நட்பே பற்றுக்கோடாக இன்னதோர் இன்னைக்

காலத்து வழுவின்றி இவ்விடத்து வருதல் அதனினும் வியப்பையுடையது. இவ்வாறு வருவனென்று சொல்லிய வேந்தனது பெருமையும், அவன் சொல்லிய சொற் பழுதின்றாக வந்தவனது அறிவும் வியக்குந் தொறும் வியக்குந் தொறும் வியப்பின் எல்லையைக் கடந்துள்ளது. ஆதலால் தன் செங்கோல் செல்லாத தேயத்துறையும் சான்றோனது நெஞ்சைத் தன்னிடத்தே உரித்தாகப்பெற்ற பழைய புகழையுடைய பெரியோனை இழந்த இத்தேயம் இடும்பையுறுங்கொல்லோ! இதுதான் இரங்கத்தக்கது!" (புறம். 217).

இவ்வாறு பொத்தியார் வியந்தும், கையற்றும் கூறித் தானும் அவர்களோடு வடக்கிருந்து உயிர் துறக்கத் துணிந்தார். "பிள்ளைப்பேறு இல்லாதவர் துறக்கம் புகுதல் அருமை'! யென்று நூல்கள் அறிவிக்கும். இதனை அறிந்தே சோழன் புலவரது மனைவி கருவுற்றிருப்பதால் பொத்தியார் தம்மோடு வடக்கிருத்தல் தகுதி அல்லவென்பதை யுணர்ந்து 'புலவரே தாங்கள் பிள்ளைப்பேறு பெற்றபின் ஈண்டு வருக' என்றனன். பொத்தியார் சோழனின் பிரிவை ஆற்றாது அளவிலாத் துயர் கொண்டு தம் ஊரை அடைந்தார்.

பின் தமக்கு மகவு பிறந்த பின் தம் ஊரை விட்டு உறையூர் வந்தார். அவ்வூர் மன்றம் சோழன் இல்லாமையின் மங்கிக்கிடப்பதைப் புலவர் அறிந்து மன முருகினார். அவ்வூரை விட்டுவந்தார். அவனது நடுகல்லைக்கண்டார். தமது நண்பன் கல்லாயினனே என்றெண்ணி கலங்கியவராய்ப் பின்வருமாறு கூறினார்.

"பாடுநர்க்கும், ஆடுநர்க்கும் பல்பொருள் கொடுத்தப் பேரன்பினன்; ஆன்றோர்கள் கூறிய அறத்தினின்

றும் வழுவாது ஆட்சி செய்த செங்கோலன்; மகளி ரிடத்து மெல்லியன்; வீரர்க்கு வீரன்; உயர்ந்தோர்க் குப் புகலிடம்; அவனை அத்தன்மை யுடையோ னென்று கருதாது கூற்றம் அவன் உயிரைக் கொண்டு சென்றது. ஆதலால் வாய்மை யுடைய புலவர்களே, நம் துன்புற்ற சுற்றத்தையும் சேர்த்துக்கொண்டு அக் கூற்றத்தை வைவோம் வாரீர்" என்றார். (புறம். 221).

இவ்வாறு பொத்தியார் நடுகல்லைப் பார்த்துக் கூறியபிறகு 'தன்னை மகன் பிறந்தபின் வாவென்று கூறினையே' ஆதலின் அவ்வாறு வந்துற்ற எனக்கு இட மளிப்பாய் என்று அந்நடுகல்லைப் பார்த்துக் கூறினர். "நிழலைக் காட்டிலும் நின்னைப்பிரியாது உறையும் நின் விருப்பமுள்ள மனைவி வயிற்று மகன் பிறந்த பின் வர்வெனச் சொல்லி என்னை இங்கிருந்து போக்கிய அன் பில்லாதவனே, நின்னோடு என்னிடையுள்ள நட்பினை நீ எண்ணுதிருப்பாயல்லை. புகழை விரும்புவோனே எனக்கு நீ குறித்துள்ள இடம் யாது? சொல்வாயாக" என்றனர்.

கோப்பெருஞ் சோழனே கல்லாகியும் இடம் கொடுத்தான். பொத்தியாரும் "இன்னுயிர் விரும் புங் கிழமைத் தொன்னட் புடையோர் தம்முழைச் செலின் அவர் நடுகல் ஆகியக் கண்ணும் இடங் கொடுத்து அளிப்பர்" என்று அதனை வியந்து வடக் கிருப்பாராயினர். இவ்வாறு பொத்தியார் தமது நண்பர் அல்லலுற்ற காலத்துத் தாமும் சேர்ந்து அல்ல லுழப்பாராயினர். 'அழிவின் கண் அல்லல் உழப்ப தாம் நட்பு' என்ற ஆன்றோர் வாக்குப் பொய்க்காத வாறு பொத்தியார் விளங்கினர்.

இத்தகைய நட்பின் உயர்வைக் கண்டு அக்கா லத்து வாழ்ந்த கண்ணகனாரும், கருவூர் பெருஞ் சதுக் கத்துப் பூத நாதனாரும் இரங்கிப்பாடியுள்ளனர். அவற் றுள் கண்ணகனார் இரங்கிக் கூறியதாவது, "பொன் னும் பவளமும் முத்தும் மணியும், நிலம் கடல் மலை என்பவற்றில் ஒன்றுக்கொன்று நெடிய சேய்மையிலிருப் பினும், அரிய விலையினையுடைய நல்ல அணிகலன்களைச் செய்யும் பொழுது ஓரிடத்துத் தோன்றினார்போல; எப்பொழுதும் சான்றோர் சான்றோர் பக்கத்தினராவர். என்று இரங்கிக் கூறினர்.

இவ்வாறு கோப்பெருஞ் சோழனோடு பிசிராந்தை யாரும், பொத்தியாரும் கொண்ட நட்பின் உயர்வை எண்ணுங்காலத்து இறும்பூதெய்த வேண்டியுள்ளது. பாரியிடத்துக் கபிலர் கொண்ட நட்பும் இது போன் றதே யாகும்.

பாரி என்பான் பண்டைக் காலத்தே பெரும் புகழ் பெற்று விளங்கிய வள்ளல்கள் எழுவருள் தலைமை வாய்ந்தவன். உழுவித்துண்போர் வகையினைச் சார்ந்த வனுதலின் 'வேள்' என்ற பட்டத்தைப் பெற்று 'வேள் பாரி' என்ற பெயரோடு விளங்கினான். செல்வமிக்க முந்நூறு ஊர்களையுடைய பறம்பு நாட்டிற்குத் தலை வன். "புலங்கந்தாக இரவலர் செலினே வரைபுரை களிற்றொடு நன்கலனீயும், உரைசால் வண்புகழ்ப் பாரி" என்று ஔவையாரால் பாராட்டும் பெருஞ்சிறப்புடை யவனாய் நிலவினான். இவன் நிழலில்லாத நீண்ட வழி யில் தனி மரம்போல நின்று, தன்னை அடைந்த அறிஞர், மடவர், வலியர், மெலியர் ஆகிய யாவர்க்கும் இன்னருள் சுரக்கும் இனிய 'பண்புவாய்ந்த வள்ளியோனாய் வாழ்ந்

7

தான். ‘உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை, வாய்மொழிக்கபிலன்’ என நல்லிசைப் புலவர்களால் மேம்படுத்து ஏத்தப்பட்ட கபிலரென்னும் புலவரைத் தனது உயிர் நட்பினராகக் கொண்டான். அப்புலவர் இவனது பெருங்கொடையைக் கண்டு இவன் ஈகைக்கு மாரியினையே பலவிடத்தும் உவமை கூறியுள்ளார். ‘பாரியொருவனும் அல்லன் மாரியுமுண்டீண்டு உலகு புரப்பதுவே’ என்று வருவது காண்க. ‘ஊருடன் இரவலர்க்கருளித் தேருடன் முல்லைக் கீத்த’ இவனது அருளினைக் கண்டு ஆன்றோர் பலர் பாராட்டினர்.

இத்தகைய பண்பும் பாராட்டுதலையும் பெற்ற பாரி வள்ளலிடத்துக் கபிலர் கொண்ட நட்புக்கு,

> **“ அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்**
> **அல்லல் உழப்பதாம் நட்பு ”**

என்ற வள்ளுவர் குறளைக் காட்டுவதன்றி வேறு காட்டுகள் காட்டுவதரிது.

சேர, சோழ, பாண்டியராகிய மூவேந்தரும் பாரியினது புகழ்மேம்படுதலைக் கண்டு பொறாமையுற்றனர். பொறாமையால் இம்மூவரும் ஒருங்கு கூடிப் படையெடுத்துவந்து இவனது பறம்பு மலையை நெடுங்காலம் முற்றுகையிட்டனர். அப்பொழுது பாரியின் ஆருயிர் நண்பராகிய கபிலர் கிளிகளை வளர்த்து விடுத்து, அரணுக்கு அப்புறத்து விளைநிலங்களிலுள்ள நெற்கதிர்களை நாளுங் கொணரச் செய்து ஆண்டுள்ள குடிபடைகளை அருத்திப் போராற்றலால் தளராவண்ணம் புரிந்து பாதுகாத்து வந்தனர்.

பின் கபிலர் பறம்பு மலையை முற்றியிருந்த மூவேந்தரிடத்துச் சென்று மூவேந்தரை நோக்கி "நீவிர் முத்திறத்தாரும் ஒருங்கு கூடித்தானை, யானை, குதிரை முதலிய படைகளைக் கொண்டு எத்துணை காலம் முற்றிப் பொருவீராயினும் இப்பாரியினுடைய பறம்பினைக் கொள்ளுதற்கரிது. இவனது முந்நூறு ஊரையும் இவன்பாற் பரிசிலர் பாடி முன்னமே பெற்றனர். இப்போது யாமும், பாரியும் உள்ளோம். பரிசில் பெற்ற பாணரும் கூத்தரும் போல நீவிர் மூவரும் பாடியும் ஆடியும் வரின் பறம்பு கொள்ளுதல் எளிது' என்று பாரியின் நாட்டைக்கொள்ளுதலின் அருமையையும், எளிமையையும் தமது இனிய பாடலால் எடுத்துக் கூறினர். (புறம். 110)

இதனைக் கேட்ட மூவேந்தரும் இவனை எதிர்த்து வெல்லுதல் அரிதென ஓர்ந்து, இவனோடு பொருதற் கஞ்சி ஓடினரென்ப. 'ஏந்து கோட்டியானை வேந்தரோட்டிய கடும்பரிப் புரவிக் கைவண்பாரி' என்பதனால் இவன் ஒருங்கு கூடிய அம்மூவேந்தரையும் வென்றோட்டியமை நன்கு புலப்படும். பாரியை வெல்லுதல் அரிதென அறிந்த அம்மூவரும் பின்னர் பாரியை வஞ்சித்துக் கொன்றனர்.

பாரியிறந்த பின்னர், அவனது இன்னுயிர் நண்பராகிய கபிலர், பாரியை நீத்துத் தனித்து உயிர்வாழ்வதற்கு மனமிலராயினும், அவனுடைய அறிவுடை மகளிரைக் காத்தற்கு வேறொருவரும் இலராதல் பற்றி உயிர்வாழ வேண்டியவரானார். அம்மகளிர்க்குத் தக்க அறிவும் பெருமையுமுடைய கணவரைத் தேட முற்பட்டார். அப்பொழுது பறம்புவிடுத்துச் செல்ல மன

மின்றிக் கபிலரும், பாரிமகளிரும் பறம்பினை நினையுந் தொறும், நோக்குந்தோறும் உள்ளம் நெக்கு நெக்கு உருகிக் கண்ணீர் வடித்தனர். கபிலரும், பாரி மகளிரும் பறம்பினை விடத் துணிந்தனர். அப்பொழுது கபிலர் பறம்பினை விட்டுப் பிரியும்பொழுது பின் வருமாறு கூறிச் சென்று பிரிந்தார்.

"மதுவினையும், ஆட்டுக்கிடாவின் ஊனோடு கொழுவிய துவையினை உடைய ஊன் சோற்றையும் விரும்பியாங்கு அளிக்கும் மிக்க செல்வம் முதிர்ந்து எம்மோடு முன்பு நட்புச் செய்தாய். இன்று பாரி இறந்ததால் கலக்கமுற்ற உள்ளத்தோடு கண்ணீர் வடித்து, அவனது மகளிர்க்கு மணம் முடிக்கவேண்டி உரிய கணவரைத் தேட உம்மை விட்டுப் பிரிகின்றேன். ஆதலின் பறம்பே நீ பல்லாண்டு வாழ்வாயாக' என்று வாழ்த்திச் சென்றார்.

இவ்வாறு பரம்பு மலையைக் கபிலர் நினையுந்தொறும் நினையுந்தொரும் இரங்கிக் கூறிய இனிய பாடல்கள் பல உள. பாரி இறந்து ஒரு திங்களாகியும் பாரி மகளிர் தமது தந்தையை மறந்தாரில்லை, தந்தையின் நினைவு வரும்போதெல்லாம், தந்தையோடு வாழ்ந்த வளத்தினை நினைந்து உளம் வாடினர். ஒரு நாள் அம்மகளிர் ஒரு ஊரின் கண் தங்கினர். அன்றிரவு நிலாத் தோன்றிய போது அந்நிலவினைக் கண்ட மகளிர், "இதே நிலவு தோன்றிய முன் திங்களன்று தன் தந்தையோடு தமது அரசுநிலையிட்ட திருவுடை நகர்க்கண் இனிது மகிழ்ந்து விளையாடியதும், அடுத்த இந்நிலாக் காலத்துத் தாம் தந்தையிழந்து தண்பறம்பிழந்து தமியராய்த் துச்சிலொதுங்கித் துயருறுவதும் நினைந்து இரங்கினர்.' அவர்

கள் இரங்கிக் கூறிய இனிய பாடலே பின் வரும் பாடலாகும் :—

அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையு முடையேமெங் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே''
(புறம், 112)

இத்தகைய இனிய பாடல்கள் பாடும் அறிவுத் திறன் பெற்றவராக அம்மகளிர்கள் விளங்கினரென்றால் அவர்களது அறிவின் மாட்சியை என்னென்று இயம்புவது! இத்தகைய அறிவுத்திறன் பெற்றும், அருள்மனம் பெற்ற அரசனது மகளிராய் இருந்தும் அவர்களை ஆதரிப்பாரின்று அரசர்கள்பால் அழைத்துச் சென்று ஆதரிக்கும்படி வேண்ட ஒரு புலவர் வேண்டிருந்தது. அவ்வாறு அம்மகளிரைக் கபிலர் விச்சிக்கோன், இருங்கோவேள் முதலிய மன்னர்களிடத்தில் அழைத்துச் சென்றார். அவர்களில் முதற்கண் விச்சிக்கோனுழைச் சென்று வேண்டினர்.

'‚விளங்குமணிக் கொடும்பூண் விச்சிக்கோவே! நினது மலை பலவின் கனியைக் கவர்ந்து உண்ட பகுத்தறிவில்லாக் கருவிரல் கடுவன், தன் செம்முக மந்தியோடு சிறந்து சேண் விளங்கி இன்பம் துய்க்க இடந்தருவது ஆதலின், நீயும் இவரை வரைந்து கொண்டு இன்புற்று வாழ்தல் வேண்டும். முல்லைக் கொடி நாத்தழும் பேறப் பாடாதாயினும், கறங்கு மணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த பரந்

தோங்கு சிறப்பின் பாரி மகளிர் இவராவர். இம் மகளிரை நின்பால் அழைத்து வந்த யானோ பரிசில் வேண்டும் அந்தணன். ஆதலின் நினக்கு யான் கொடுப்பக் கொள்வாயாக'' என்று விச்சிக்கோனை வேண்டினார். அவன் இம் மகளிரைக் கொள்ளின் மூவேந்தரின் பகைக்கு ஆளாவோம் என்றெண்ணிக் கொள்ள மறுத்து விட்டான். அவனை விட்டு இருங்கோ வேளிடம் சென்று வேண்டினார்.

“வென்றிப் போரையுடைய தலைவ! நினது வேளிர் குடியோ நாற்பத்தொன்பது தலைமுறையாய் தொன்று தொட்டு வரும் குடியாகும். அத்தகைய உயர்குடியிலே நீ தோன்றியுள்ளாய் இம் மகளிரோ ஊருடன் இரவலர்க்கருளித் தேரினை முல்லைக்கீந்த நிலைத்த புகழினையுடைய பறம்பிற் கோமான் பாரி யினது மகளிர். யான் இவர்கள் தந்தையின் தோழனுதலால் இவர்கள் என்னுடைய மகளிர்கள். யானோ அந்தணர் குலத்துத் தோன்றிய புலவன். ஆதலின் யான்தர, நீ இவர்களைக் கொள்ளுதல் குறையன்று. கொள்வாயென்று வேண்டினார்.'' அவனும் மூவேந் தர்களின் பகைக்கு ஆளாகவேண்டுமே யென்றெண் ணிக் கொள்ள மறுத்தான்.''

அது கண்ட கபிலர்க்குப் பெருவெகுளி யுண்டா யிற்று அதனால் அவர் இருங்கோவேளை நோக்கி “நீ வேந்தனும் அல்லை! வீரனும் அல்லை! வேங்கை மலர் சிதறிக்கிடக்கின்ற மலைப்பாறை, சேய்மை யிலுள்ளார்க்குப் புலிபோலத் தோன்றி அச்சுறுத் தும். அதுபோல, அரசாளுந் திறமும் அதற்கேற்ற ஆண்மையுமில்லாத நீ அரசகோலத்தோடு பிறர்க்கு

அரசன் போலத் தோற்றுகின்றனை. 'இவர் பாரியின் மகளிர், இவர்களை மணந்துகொள்' என்று நினது நிலை அறியாமல் நின்னை நோக்கி யான் கூறியது தவறு. அது பாரியின் பெருமைக்கு இழுக்காகும். அதனால் அச்சொல்லை மறந்து விடுக; நீ வாழ்வாயாக'' என்று இகழ்ந்து கூறி அவனை விடுத்துச் சென்றார்.

பின்னர் புண்பட்ட மனத்துடன் பாரி மகளிரை ஆன்றோர்பால் அமர்த்திவிட்டு, பாரியின் பிரிவாற்றாது வடக்கிருப்பாராயினர். அவர் வடக்கிருந்த பொழுது அன்பலைத்து என்பினை உருக்குமாறு பாடினார். அப்பாட்டின் கருத்து:—

''மலைகெழுநாட மாவண்பாரி! நீயும் யானும் கலந்த நட்பிற்குப் பொருந்த நீ ஒழுகுதலன்றி என்னை வெறுத்தாயாகக் கடவை; நின்னோடு யானும் உயிர் விடுதற்கு ஒப்பிட்டபோது நீ இயையாது ஈண்டு தவிர்கெனச் சொல்லி என்னைத் தடுத்து விட்டாய்' நீ எனக்கு உதவி செய்த ஆண்டுகளை நினையுந்தோறும், பெருமைதக்க தலைமையினையுடைய நட்பிற்கும் இது பொருந்துவதன்று. ஆதலின் நின்னோடு யான் பொருந்தினேன் அல்லன். இங்ஙனம் பொருந்துதல் இலனாயினும் இப்பிறப்பின்கண் நீயும் யானும் கூடி இன்புற்றிருந்தவாறு போல மறு பிறப்பினும் இடைவிடாது நின்னோடு கூடிவாழ்தலை உயர்ந்தவிதி கூட்டுவதாக'' என்று கூறி வடக்கிருந்து உயிர்நீத்தார். (புறம். 236)

கபிலர் பாரியினிடம் கொண்டிருந்த நட்பின் பெருமைதான் என்னே! எழுமையும் தொடரும் கெழுமிய நட்புடைய அவர் பாரிக்குற்ற அல்லலை

யும் அழிவையும் நீக்கி, அவன் உயிர்துறந்தபோது தாமும் உயிர் வாழ்தலின்றி அவன் பொருட்டுச் சிறிது காலம் அல்லல் பல அடைந்து உயிர்துறந் தார். தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

**"அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு"**

என்று கூறிய குறளுக்குப் பாரியிடத்துக் கபிலர் கொண்ட நட்பும், கோப்பெருஞ் சோழனிடத்துப் பிசிராந்தையாரும், பொத்தியாரும் கொண்ட நட்பும் இலக்கியமாகத் திகழ்வதை அறியலாம்.

ஔவையாரைத் 'தமிழ்த்தாயென்று' தகவு டைத் தமிழ்மக்கள் போற்றுவர். இவர் அஞ்சா நெஞ் சமும் அறிவுத் திறனும் பெற்றுவிளங்கிய பெண் மணிகளுள் முடிமணியாக விளங்கும் மூதறிவாட்டி யாவர். வீரமும், அறிவும் பெற்ற திருவுடை வேந்த ரிடத்துச் சென்று அவர்களுக்கு வேண்டிய அறி வினைப் புகட்டி, தம் புலமையையும் காட்டி; ஆடல் பாடல்களின் விறலையும் வெளிப்படுத்தி அவர்கள் மனமுவந்தளிக்கும் பெரும் பரிசிலைப் பெற்று வாழ்ந்த அறிஞராவர். தமிழகம் தழைக்கத் தோன்றிய இந் நல்லிசைப் புலவர் தகடூரை ஆண்ட அதியமான் நெடு மானஞ்சி என்னும் அரசனிடத்து நட்பு கொண்டு ஒழு கினர். அதியமானும் ஔவையாரது புலமையின் பொலிவையும். அவரது பேரன்பையும் கண்டு அவரி டத்துப்பிரியா நட்பு கொண்டான். அதியமான் ஔவை யார்க்கு வேண்டுவன அவ்வப்போது அளித்து, அவர் அறிவுரைப்பெற்று அறங்கெடாது ஆட்சி செலுத்தி

வந்தான். அவன் அரிதிற் கிடைத்த நெல்லிக்கனியைத் தான் அருந்துதலின்றி, இவ்வறிவு சான்ற புலவர் அருந்தின் அருமைத் தமிழகமும், தமிழ் மொழியும் பல்லாண்டு பண்புற்றுப் பொலிவுறும் என்றெண்ணி அப்புலவர்க்கு ஈந்தான்.

அதியமான் ஔவையாரிடத்தில் கொண்ட பேரன்புக்குச் சான்று இது வொன்றே சாலும். அம்மூதறிவாட்டியின் இன்தமிழ்ப் பாடல்களுக்கு மனம் குழைந்து அருள் சுரந்தான். புதல்வரின் மழலை மொழிக்குத் தந்தையார் அருளுதல் போல, அதியமானும் தம் வாய்ச் சொல்லுக்கு அருளினனென்று அப்புலவரே பாடியுள்ளார். ஔவையார் அதியமானுக்காகத் தொண்டைமானிடத்துத் தூது சென்று, அவனது படைக்கலக் கொட்டிலைப் புகழ்வதுபோல் அவனது வீரத்தைப் பழித்துக்கூறி அவனது செருக்கை அடக்கிய செய்தியை அறிவோம்.

அதியமான் பெருஞ்சேரலிரும் பொறையோடு பெரும்போர் புரிந்து இறுதியில் அவனால் விடுத்தவேலொன்று மார்பில் தாக்க மண்ணில் சாய்ந்து மாண்டான்; அந்தோ ! அவன் இறப்பினைக் கண்ட அவனது இன்னுயிர் நண்பரான ஔவையார் எய்திய துயரினை எங்ஙனம் கூறுவது! புலவர் அவனது இன்குணங்களை யெல்லாம் நினைந்து நினைந்து வருந்திப் பிரிவாற்றாது பின் வருமாறு கூறிப் புலம்புகின்றார்.

“தன்னிடம் உள்ளது சிறிதாயினும் அதை முழுவதும் தமிழ்வாணருக்குக் கொடுத்துத் தான் வறிதிருப்பான்; அது கழிந்ததே! சோறு சிறு அளவிற்றாயினும் அதை யாவர்க்கும் பகிர்ந்து கொடுத்துப் பலரோடுண்

பான்; அது கழிந்ததே! அம்பும் வேலும் அகத்தில் ஊடுருவிச் செல்லும் அமர்க்களம் முழுவதும் தான் சென்று நிற்பான்; அது கழிந்ததே! என்னிடத்துக் கொண்ட பேரன்பினால் நரந்தப் பூ நாறும் தன் கையால் என் தலையைத் தைத்தது அருள் காட்டுவான்; அது கழிந்ததே! அதியமான் மார்பகத்துத் தைத்தவேல், அவன் மார்பில் மாத்திரம் தைத்த தன்று. அது பாணரது பாத்திரத்தின் துளையில் உருவி, இரப்போர் கையினுள்ளும் தைத்துருவித் தன்னால் புரக்கப்படும் சுற்றத்தாரது கண்ணின் கருமணியின் ஒளி மழுங்க, புலவரது நாவின் கண்ணேயும் போய் விழுந்தது. எமக்கு ஆதாரமாகிய எம் இறைவன் எவ்விடத்துள்ளான் கொல்லோ! இனி இவ்வுலகத்தில் பாடுவாருமில்லை; பாடுவார்க் கொன்று ஈவாருமில்லை; பனித்துறைக்கண்ணே பூத்த பகன்றைப் பூ, பிறரால் பறித்துச் சூடப்படாமல் வறிதே கழிந்தாற்போலப் பிறர்க்குக் கொடுத்தறியாது மாயும் உயிர்கள் மிகப்பல; அத்தன்மையனோ எம் அரசன்!

அவனை இன்றிக் கழிகின்ற காலையும் மாலையும் இனி இல்லையாகுக; அவன் இன்றி யான் உயிர் வாழ்தலில் பயனில்லை; ஆதலின் என் ஆயுட்காலம் விரைவில் அழியட்டும்; அதியமான் தன் தாயத்தாரால் கொடுக்கப்பட்ட நாட்டை வேண்டாமென்று கூறியவனயிற்றே; அத்தகையவன் நடுகல்லில் மயிற்பீலியைச் சூட்டிப் படைக்கும் படையிலை ஏற்பானோ! ஏற்கானோ என்று இதய முருகப் பாடினார்.

அதியமானது உடலை ஈமச் சிதையில் வைத்து எரியூட்டினர். அது கண்ட ஔவையார் "ஈமத்தீ இவ்

வள்ளியோனது உடலைச் சிதைக்காமல் அவியினும் அவிக, அன்றிச் சிதையும்படி ஓங்கி எரியினும் எரிக; ஞாயிற்றை ஒப்போனது புகழ் உடம்பு ஒரு காலத்தும் அழியாது'' என்று அவனது புகழைப் பாராட்டிக் கசிந்துருகிக் கண்ணீர் வடித்தார்.

பண்டைக் காலத் தமிழ்ப் புலவர்கள் தம்மையாதரித்து நண்பு செய்த அரசர், வள்ளல் முதலியவரின் துன்பக் காலத்தில் அவர் தம் பிரிவாற்ருது அன்பினல் உடனுயிர் விடுதலும், உள்ள முருகிக் கண்ணீர் விட்டுக் கலங்குதலுமாகிய பெருங் கேண்மையினராய் விளங்கினமை மேற்காட்டிய வாற்ருல் நன்கு துணியப்படும்.

MADURA TA...

TAMIL PANNBADU

By

Vidwan. K. PERIASAMI.

Nirmala Publishing House

SALEM.

Copv Right. **1953** Price **0—15—0.**